4 - JAN 1932

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௨௯] பிரஜோத்பத்தி ஹு ஆவணிமீ [பகுதி-௧௦.
Vol. XXIX. *August-September-1931.* No. 10.

உள்ளுறை.

திருபொழுதாராய்ச்சி,— ஸ்ரீமத். சி. கணேசையர் ௩௧௬
கூத்தர் தெய்வப்பாணி வறைறது எதனை;— ,, ரெ. அப்புவையங்கார் ௩௫௩
மதிப்புரை:— ௩௪௫

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1931.

...hu Raja M. Dinakara Bahadur Avl.
...y Thiru. Narayana Iyengar, at the
...ower Press, No. 54, New Jail Road, M...

215024

## ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.


## விளம்பரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் சமீபத்தில் அச்சிட்டு விற்பனைக்குச் சித்தம் செய்துவைக்கப்பட்டுள்ள புத்தகங்களின் விலை முதலிய விவரக்குறிப்பு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | வைத்தியசாரசங்கிரகம் (இரண்டாம்பதிப்பு) | ரூ. | 5—0—0 |
| 2. | மாறனலங்காரம் | ,, | 4—8—0 |
| 3. | வில்லிபாரதம் | ,, | 4—0—0 |
| 4. | அகப்பொருள்விளக்கம் | ,, | 1—4—0 |
| 5. | திருவாரூருலா. | ,, | 0—8—0 |
| 6. | திணைமாலை நூற்றைம்பது. | ,, | 0—8—0 |
| 7. | சேதுநாடுந் தமிழும். | ,, | 0—6—0 |
| 8. | பொருளதிகார ஆராய்ச்சி. | ,, | 1—4—0 |
| 9. | கூடற்புராணம் (முதற்பதிப்பு) | | 0—10—0 |
| 10. | மதுரைத்திருப்பணிமாலை (மூன்றாம்பதிப்பு) | | 0—8—0 |
| 11. | பன்னூற்றிரட்டு (நான்காம்பதிப்பு) | | 3—0—0 |
| 12. | அரும்பொருள்விளக்க நிகண்டு (முதற்பதிப்பு) | | 1—4—0 |

தபாற்கூலி வேறு. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

துரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.


4 JAN


உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௨௯.] பிரஜோத்பத்தி௵ ஆவணிமீ [பகுதி-௧௦.

Vol. XXIX. August-September-1931. No. 10.


## சிறுபொழுதாராய்ச்சி.

நாம், செந்தமிழ்த்தொகுதி ௨௯, பகுதி ௨-ல் சிறுபொழுது என்னும் ஒருவிஷயம் எழுதினோம். அதற்கு மறுப்பாகச் செந்தமிழ்த் தொகுதி ௨௯, பகுதி ௫-ல் ஸ்ரீமத். சி. வீரபாகுப்பிள்ளையவர்கள் சிறுபொழுதாராய்ச்சி என ஒரு விஷயம் எழுதி வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாராய்ச்சி ஸ்ரீ சிவஞானசுவாமிகள்கருத்தைத் தாபிக்க வந்ததே. எமக்குச் சுவாமிகளிடத்திற் காய்வும், இளம்பூரணர் நச்சினார்க்கினியரிடத்தில் உவப்பும் இல்லை. தமிழுலகிற்கு உண்மையை வெளிப்படுத்தவேண்டுமென்று எம்மால் அவ்விஷயம் எழுதப்பட்டதன்றிப் பொழுதுபோக்கிற்காக எழுதப்பட்டதன்று. பிள்ளையவர்களோ, சுவாமிகள்மீதுகொண்ட உவப்புக்காரணமாக உண்மையை மறைத்துத் தமது சொல்வன்மையானே மெய்ம்மைகாட்டி அவ்விஷயத்தை எழுதியுள்ளார்கள். அங்ஙனம் எழுதியுள்ளார்கள் என்பது அவ்விஷயத்தைப் படித்த அறிஞர்க்குணராதே போகாது. எனினும், ஆழ்ந்துநோக்காதார்க்கு அஃதும் உண்மைபோலக்காணப்படுமென்பதுபற்றி, இன்னுமொருமுறை யாம் அதனை ஆராய்ந்துகாட்ட வேண்டியதாயிற்று. நிற்க.

நாம் எழுதிய 'சிறுபொழுது' என்னும் விஷயத்தையும், பிள்ளையவர்கள் எழுதிய 'சிறுபொழுதாராய்ச்சி' என்னும் விஷயத்தையும் படித்தவர்களுக்கு, விஷயத்தொடக்கம், இன்னது என்பது விளங்குமாதலின்,

அவ்விஷயத்தொடக்கத்தை யாம் ஈண்டு எடுத்துக்கூறுது, பிள்ளையவர்களின் ஆராய்ச்சியுள் வேண்டியவற்றைமாத்திரம் எடுத்துக்காட்டி மறுத்து உண்மையை நாட்டுதும்.

பிள்ளையவர்கள் "இவ்விதம் ஸ்ரீ சுவாமிகள் இளம்பூரணரையும் நச்சினார்க்கினியரையும் மறுத்துச் சிறுபொழுதைந்து என்று கூறிவிடவே சிறுபொழுதாறென்பது பழங்கதையாய்விட்டது" என்றார்கள்.

சுவாமிகளிடத்திலுள்ள உவப்போடு நோக்குவார்க்குச் சிறுபொழுதாறென்பது பழங்கதையாவதன்றி, ஏனை அறிஞர்க்கு அது பழங்கதையாகுமா? முன்னோர்கூறிய உண்மைநூல்களைப் பழங்கதை என்று கூறப்புகுந்த இக்காலத்துப் பிள்ளையவர்கள் சிறுபொழுதாறென்பது பழங்கதையாய்விட்டது என்று கூறுவது ஒரு நூதனமன்று.

பிள்ளையவர்கள், இளம்பூரணருரைப்பதிப்பில், 'வைகறை விடியல்' என்றிருப்பது, நச்சினார்க்கினியர் காலம்வரையும் 'வைகுறு விடியல்' என்றுதானிருந்திருக்கிறது என்றும், அதற்குக் காரணம் நச்சினார்க்கினியர் தமக்குச் சாதகமாக இருக்கும் 'வைகறை விடியல்' என்னும் பாடத்தை எடுத்துக்கொள்ளாமையே என்றும், பின் 'வைகறைவிடியல்' என்னும் பாடம் ஏடு எழுதுவோரால் திருத்தப்பட்டதென்றும் கூறுகிறார்கள்,

நச்சினார்க்கினியர் 'வைகறைவிடியல்' என்னும் பாடத்தை எடுத்துக்கொள்ளாமையால், இளம்பூரணர் கொண்டபாடமும் 'வைகுறுவிடியல்' தான் எனின், நச்சினார்க்கினியர் 'வைகறை விடியல்' எனப் பாடாந்தரம் கொண்டதற்குக் காரணமின்று. ஆகையால் நச்சினார்க்கினியருக்குமுன்னேயே இரண்டுபாடமும் இருந்ததென்பது துணிபேயாம். ஆயின் இளம்பூரணர் 'வைகுறு விடியல்' எனவும் பாடம் என்று கூறவில்லை, ஆதலால் அப்பாடமே ஐயமாகின்றது. அகப்பொருள்விளக்கப்புறையுரையிலும், இறையனாரகப்பொருளுரையிலும், 'வைகறைவிடியல்' என்றே பிரமாணங் காட்டப்பட்டதனாலும், 'வைகறைவிடியல்' என்பதே உண்மைப்பாடமென்பது துணிபாம். பிள்ளையவர்கள், இறையனாரகப்பொருளிலுள்ள 'வைகுறுவிடியல்' என்னும் பாடத்தை, யாம் பட்டதாரிகள்போலத் திருத்திவிட்டோம் எனக் குறைகூறிய துணிபு மிக வியக்கத்தக்கது,



ஸ்ரீமாந். தாமோதரம்பிள்ளையவர்களால் சுபானுவருடத்துச் சித்திரை மாதத்திற் பதிப்பித்த பதிப்பைப் பிள்ளையவர்கள் நோக்கியிருப்பார்களாயின், அவ்வாறு குறைகூறமாட்டார்கள். அதுவே முதற்பதிப்புப் போலும். 'வைகுறுவிடியல்' எனக் காணப்படும் பாடங்கள், பின் புத்தகம் பதித்தோரால், நச்சினார்க்கினியர்பாடத்தின்படி திருத்தப்பட்டனவேயாம்.

நச்சினார்க்கினியர், மற்றவர்கள் சொல்வதைவிடத் தாம் புதிதாக ஒன்று சொல்வதில் விருப்பமுடையாதலால், இளம்பூரணருக்கு மாறாக 'வைகுறுவிடியல்' என்னும் பாடத்தை எடுத்துக்கூறி விளக்கியிருக்கலாமென்பதே எமது கருத்து. அன்றியும், 'வைகுறு' 'வைகறை' என்னும் இருசொற்களின் பொருளையும் அவர் விளக்கிப்பேசேறலின், சொல்லின்பொருளைவிளக்குதற்கு அவ்வாறுகூறினாரென்று கொள்வதன்றி வேறுகோடல் பொருந்தாதெனக. குற்றியலுகரப்புணரியலில், "அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்—எல்லா விறுதியு முகரநிறையும்" என்று இளம்பூரணர் கொண்ட பாடத்தை, நச்சினார்க்கினியர் 'நிலையும்' என்று பாடங்கொண்டமைபற்றி, நச்சினார்க்கினியர்காலம் வரையும் நிலையும் என்றுதானிருந்தது. பின், நிறையும் என்றும் திருத்தப்பட்டது என்று கொள்ள முடியுமா? ஆதலின் அக்காரணம் பொருந்தாது. ஆகையால் நச்சினார்க்கினியர், 'வைகுறுவிடியல்' என்னும் பாடத்தையே தாம் கொண்டு, இளம்பூரணர்பாடத்தைப் பாடாந்தரமாகக் கொண்டார் என்பதே துணிபாம். பிள்ளையவர்கள், 'வைகுறு விடியல்' என வரும் இலக்கியப் பிரயோகங்களை நோக்கித் தங்கருத்திற்கேற்ப வினைத்தொகையாக்கற்கே 'வைகுறுவிடியல்'தான் இளம்பூரணர் பாடமும் என்றதன்றிப் பிறிதொன்றன்று.

இனிப் பிள்ளையவர்கள், வைகுறுவிடியலை உம்மைத்தொகையாகக் கோடல் பொருந்தாதென்கிறார். பிள்ளையவர்கள் கூறியவாறு வைகுதல்-கழிதல் எனக்கொண்டு கழிதலுறுவது என்னும் பொருளில் வைகறைக்கும்வரும் என்பது துணிபாம். அது, 'வைகுறுமீன்' (அகம். 17) என்பதற்கு, 'விடிகின்றகாலத்துமீன்' என்றே உரைகாரர் பொருள் கூறலானுமறியப்படும். ஒளிகுறைந்த இலவம்பூக்களுக்கு விடியற்காலத்து (வைகறை) மீனும் ஒளிகுன்றல்பற்றி உவமையாக ஆசிரியர்கூறினர்.

பெரும்பாணாற்றுப்படையிலே, 'பொற்குழை' ஒளிகுறைந்து விளங்கல் பற்றி, "வைகுறு மீனிற் பையத் தோன்றும்" (318 ம் அடி) என, விடிகின்றகாலத்து மீனே உவமை புணர்க்கப்பட்டது. நச்சினார்க்கினியர் 'வைகுறுமீன்' என்பதற்கு, விடிதற்குக் காரணமாகிய வெள்ளியாகிய மீன என்று பொருள் கூறுகின்றனர். ஆண்டும் ஒளிகுறைதற்கே உவமையாதலின், விடிகின்றகாலத்துமீன் என்றலே பொருத்தமாம். வெள்ளியாகிய மீனென்றல் 'பையத்தோன்றும்' என்பதற்கு அவ்வளவு பொருத்தமுடையதன்று. நற்றிணை உரையாசிரியரும், 'வைகுறுமீன்' (48) என்பதற்கு விடியற்காலத்துமீன் என்றே பொருள்கூறுகின்றனர்.

இங்ஙனம் வைகுறு விடியற்கும் பெயராய் வருதலின் 'வைகுறுவிடியல்' என நச்சினார்க்கினியர்கொண்ட பாடத்திற்கும் வலிந்துகொள்ளாது, இடம்நோக்கி வைகுறுவும் விடியலும் என்று உம்மைத்தொகையாகவும் பொருள்கொள்ளலாமென்பது துணிபு. 'வைகுறுவிடியல்' என்பதை வைகறைக்குக்கொள்ளுங்கால் வைகுறுவாகிய விடியல் எனவுங் கொள்ளலாம். இங்ஙனமாக 'வைகுறுவிடியல்' என்பதைப் பண்புத்தொகையாகவும் உம்மைத்தொகையாகவுங் கோடல் பொருந்ாதென்பது எவ்வாறு பொருந்தும்? 'வைகறைவிடியல்' என்பதும் அங்ஙனே இடம்நோக்கி இருதொகையாகவுங் கொள்ளப்படும்.

இனி, "உலகவழக்கிலாகட்டும் செய்யுள்வழக்கிலாகட்டும் இரவு, முதல்யாமம், இரண்டாம் யாமம், நடுயாமம், நான்காம்யாமமென, நான்கு பிரிவாகவே பிரிக்கப்படுகின்றது. மாங்குடிமருதனர் தமது மதுரைக்காஞ்சியிலே இரவை நான்குகூறாகப் பகுத்து வருணித்திருப்பதும், அதனுரையிலே நச்சினார்க்கினியர் இரண்டாம்யாமத்திற்கும் நான்காம்யாமத்திற்கும் நடுவிடத்ததாகிய தெய்வங்களுலாவும் செயலற்ற கங்குல் என்பதும் நாங் கூறியதை உறுதிப்படுத்திவிடும்" என்றார்கள்.

இரவை நான்குகூறாகப் பிரிப்பது வடமொழி வழக்கு. மூன்றுகூறாகப் பிரிப்பது தமிழ்வழக்கு. நச்சினார்க்கினியருரைப்படி மாங்குடி மருதனரும் கருதிப் பாடினர் என்பது உண்மையாயின் அது வடமொழி வழக்கேயாம். கனூல் முதலியவையு மன்னவேயாம். தமிழ்வழக்கு மூன்றே. அது, பொருளிலக்கணநூல்கள் அவ்வாறே கூறுதலானறியப்படும். "யாலே யாமம் வைகறை" என்று அகப்பொருள்விளக்கமே



கூறுகின்றது. அதுவே பிரமாணமாம். அன்றியும், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலியவற்றிலும் யாமம் ஒன்றாகவே கூறப்படுகின்றது. பானாள் என்றும், 'அரையிருள்' என்றும், 'நள்ளென்யாமம்' என்றும், நடுயாமம் என்றும், இப்படியே வருகின்றன. முதல்யாமத்திற்கு யாம் பிரமாணங் காட்டாமல்விட்டது சிந்திக்கத்தக்கது என்கிறார்கள். இளம்பூரணர், சேனாவரையர் முதலியோரும் உதாரணம் வந்தவழிக் காண்க என்கிறார்கள்; அங்ஙனம் கூறுதலால் அவர்கூற்றுப் பிழையாகுமா? இலக்கியம் இறந்துபட்டிருக்கலாம். அல்லது பாடாமல் விட்டிருக்கலாம். முதல்யாமத்திற்கு யாம் மேற்கோள்காட்டாமைபற்றி அஃது இல்லையென்பது கருத்தாகுமா? பகலானது எப்படித் தமிழ் வழக்குப்படி, முற்பகல் நடுப்பகல். பிற்பகல் எனப் பிரிக்கப்படுமோ அப்படியே இரவும் முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு எனப் பிரிக்கப்படுமென்பது தானே போதாதா? ஆகையால், சிலப்பதிகாரம்கூறும் அரையிருள்யாமம் என்பதும், பட்டினப்பாலையில் வரும் கடைக்கங்குல் என்பதும் முறையே இடையாமத்தையும் பின்னிரவையும் குறிக்குமென்பது திடம். வைகறையும் கடைக்கங்குலும் ஒன்றும். நச்சினார்க்கினியர் கடைக்கங்குல்—விடியல் என்றதும் பின்னிரவாகிய வைகறையையே.

சிலப்பதிகாரத்தில், 'அரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்' என்பதற்கு உரைகாரர், 'நான்குயாமம்' என்பதை மனத்தில் வைத்துக் கொண்டு 'அரையிருள்யாமம்' உம்மைத்தொகை என்றும், அரையிருள் இரண்டாம்யாமமென்றும், பகல் நடுயாமமென்றும், நலிந்து பொருள் கொள்கின்றனர். பழைய உரையாசிரியரோ, 'அரையிருள்யாமத்தும் ஒரு மாத்திரைப்பொழுதும்' என்றும் பொருள் கூறுகின்றனர்; ஆதலின் பழைய உரைப்படி நடுயாமமாகிய ஒருபொழுதே கொள்ளப்படுதலின், இரவும் மூன்று பிரிவையுடையதென்பது துணியப்படும். இங்ஙனமே மதுரைக்காஞ்சியிலும், நச்சினார்க்கினியரும் அடிகளைப் பிரித்துக்கூட்டி, நலிந்து நான்குயாமம் கொள்கின்றனர். பாட்டின்படி மூன்றுயாமங் கொள்ளலாகும். அதனைக் காலம்வாய்த்துழிக் காட்டுதும். ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இனி, நளவெண்பாவிலே, புகழேந்திப்புலவர்,

"மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லையெனும்

மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது."

என்று மாலைகூறிப் பின்,

"ஊக்கிய சொல்ல சொலிக்குந் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வெல்வாளர்—காக்க
இடையாமம் காவலர்கள் போந்தா ரிருளின்
புடைவா ரிருள்புடைத்தாற் போன்று."

என்று இடையாமம் கூறிப் பின், "பூசுரர்தங் கைம்மலரும்" என்னுஞ் செய்யுளில், "புலர்ந்ததே யற்றைப் பொழுது" என வைகறையுங் கூறுவர்; ஆதலானும் தமிழ்வழக்கின்படி இரா மூன்றுபிரிவுடைய தென்பதே திண்ணம்.

இனிப் பிள்ளையவர்கள், "பூசாகாலங்கள், உஷாபூசை, சிறுகாலைச் சந்தி, காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை, அர்த்தசாமம், என ஆறாகப் பகுக்கப்படுகின்றன. ஆனால், உஷாபூசை முதல் உச்சிக்காலம் வரை நான்குகாலமும் பகற் பன்னிரண்டுமணியோடு முடிகின்றன, மீதம் இரண்டுகாலம் மாலை இரவு என்னும் இரண்டையும் நடக்கும், இவை ஒருநாளைப் பப்பத்து நாழிகையாக ஆறுகூறாக்கிச் சிறுபொழுது ஆறு என்று கூறுவதை எவ்வாறு வலியுறுத்தும்" என்கின்றனர்.

நம்மூரிலுள்ள கோவில்களில் பூசாகாலம், உஷாகாலம், காலைச் சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாங்காலம், அர்த்தசாமம் என்று ஆறாக வழங்குகின்றன. இவற்றுள், உஷாகாலம் வைகறையையும், காலைச்சந்தி விடியலையும், உச்சிக்காலம் நடுப்பகலையும், சாயரட்சை எற்பாட்டையும், இரண்டாங்காலம் மாலையையும், அர்த்தசாமம் நள்ளிரவையுங் குறித்துவைக்கப்பட்டனவாகும். இவை இப்படி வழங்குவதை யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீசான்கோவிலில் விசாரித்தறியலாம். பிள்ளையவர்கள் கூறிய சிறுகாலைச்சந்தி, காலைச்சந்தியுள் அடங்குமாதலின், அஃது அதிக பூசையாம். யாம் முற்கூறிய பூசையே தமிழ்க் காலவகுப்போடு ஒத்திருக்கின்றன. இன்னும் பகலைப் பிராதக்காலம், சங்கமகாலம், மத்தியான்னகாலம், அபரான்னகாலம், சாயங்காலம் என ஐந்தாக வகுப்பதுமுண்டு. இவையெல்லாம் வடமொழிவழக்கேயாம்.



ஆதலால், ஆறுகாலமாகக்கொள்வது தமிழ்வழக்கே என்பது இதனானும் அறியலாம். திருவாரூர், வைத்தீசுவரன்கோவில் முதலிய இடங்களிலும் யாம் கூறியவாறு ஆறுகாலபூசையே நடப்பது எனக் கேட்டுள்ளாம்.

இனிப் பிள்ளையவர்கள், "இரவிற் பத்துநாழிகை மாலை; அஃதாவது ஆறுமணி முதற் பத்துமணிவரை மாலைப்பொழுது. இது எவ்விதம்.......பொருந்தும்? சூரியாஸ்தமனத்துக்கும் இரவுக்கு மிடைப்பட்ட காலமே மாலை என்பதைக் காட்டுகின்றன............அப்பொழுது செவ்வானமுடைமையும் சிறிதுநேரமாதலையும் தெரிவிக்கும்" என்கின்றார்கள்.

சூரியாஸ்தமனத்தின்மேல் சூரியோதயம்வரையுமுள்ள காலமே இரவு எனப்படும். இவ் விரவின் முற்பகுதியே மாலை. அதனை வருணிக்குங்கால் பெரும்பாலும் சிறப்புநோக்கி அந்திமாலையை எடுத்து வருணிப்பதே ஆசிரியர் வழக்கு. அதுபற்றி மாலை சிறிதுபோதென்றலும் இரவின் வேறென்றலும் பொருந்தாது.

இனிப் பிள்ளையவர்கள் "இருள்வர மாலை வாள்கொள" என்று வருணிக்கப்பட்டதென்றும், "மயங்கிரு டலைவர—வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை" என்று மாலையின் பின்னந்தியே பகலுக்கு வரவு எனப்பட்டது என்றுங் கூறினார்கள்.

இக்கூற்று, எவ்வளவு சாதுரியமாக இருக்கின்றது. ஆசிரியர் பகற்கு வரம்பு மாலை என்றது, சூரியாஸ்தமனத்தின்பின் மாலையாதலின் மாலையின் தொடக்கமே எல்லையென இவர் பின்னந்தி என்கிறார். முன் தாமும் சூரியாஸ்தமனத்தின்பின் மாலை எனக்கூறி ஒப்புக்கொண்ட பிள்ளையவர்கள், பின் மாலையின் பின்னந்தி பகற்குவரம்பு என்பது பொருத்தமுடைத்தன்று. 'எல்லைக்கு வரம்பாய இடும்பைகூர் மருண்மாலை' என்பதன்பொருளை நச்சினார்க்கினியர் உரைநோக்கியுந் தெளியலாம். மருண்மாலை என்பதற்கு மயக்கத்தைத்தரும் மாலை என்பது பொருளன்றி வேறன்று. சூரியனஸ்தமித்த அந்திமாலையிலேயே இருள்வரத்தொடங்கிவிடும். ஆதலின், 'இருடலைவர' வென்றார். அது பற்றியே நம்பரும் 'விரிமலர்த் தென்றலாம்' என்னுஞ்செய்யுளில்,

"எரிநிறச் செக்கரும் இருளுங் காட்டலால்" என்றும் கூறினார். அந்திமாலையின்பின் வரு மிருளெனில் அந்திமாலைக் குவமையாகக் கருநிறத்தைக்கூறுதல் பொருந்தாதாகும். அங்ஙனேல், பகலுக்கு மிரவுக்கு மிடையேயுள்ள அந்திமாலையைச், சிவனுக்கும் உமைக்கும் நடுவிலிருக்கும் குமாரனுக்கு உவமைகூறியது, எற்றெனில், செவ்வானந் தோன்றும் அவ்வளவு நேரத்தை நோக்கியேயாம். ஆதலின், அந்திமாலை இரவின் வேறன்று. அஸ்தமயனந்தொடங்கி முப்பதுநாழிகையும் இரவென்பது யாவர்க்குந் தெரிந்த தொன்றே.

இதுமட்டோ! பிள்ளையவர்கள், "மாலைமதியமென்பது மாலையிற் றோன்றிய மதியமென்பதல்லது வேறொன்றல்ல; ஆதலால், மாலை சிறிது நேரமென்பது பெறப்படும்" என்னுங்கருத்தோடு உரை விரிக்கின்றார்கள். மாலையிற் றோன்று மதியமென்பதனால் மாலை சிறிதுபொழுது என்பது எவ்வாறு பெறப்படும்? காலையிற் றோன்றுஞ் சூரியனென்றாற் காலை சிறிதுபோழ்து என்பது பெறப்படுமா? இரவிற்றோன்றுஞ் சந்திரன் என்றால் இரவு சிறிதுபோழ்து என்பது பெறப்படுமா? இவைபோலவே மாலைமதியம் என்பதும். மாலைமதியமென்றால், மாலையின் முற்பகுதியிற்றோன்றும் சந்திரன் என்பது கருத்தாகுமன்றி, மாலை பின்னில்லை என்பதைக் காட்டாது. பூரணைக்காலத்திலே பொழுதுபட, அல்லது பொழுதுபட்டபின் றோன்றுஞ் சந்திரனுடைய கிரணங்கள், அந்திமாலையிலே சரியாக விளங்கித்தோன்றுவது. மாலையின் பிற்பகுதியிலேயே விளங்கித் தோன்றும். அப்பொழுதே நிலவு உண்டாம். இனி, பிறையின் நிலவுப்பயன்கொள்ளவும் சதுர்த்தி அல்லது பஞ்சமியிலேதான் முடியும். இக்காலத்தை நோக்கியே வினைமுற்றிமீளும் தலைவன், பாகனை நோக்கி (அகம், ருஎ) 'கடவுக காண்குவம் பாக மதவுநடை' என்னும் செய்யுளில், மாலையிலே-தன்மனைவி சந்திரனைநோக்கி, "முகிழ்நிலாத் திகழ்தரு மூவாத்திங்களே" என விளித்து, 'என் மகனைற்றி, வருகுவையாயிற் றருகுவென் பாலென' என்று தன்மனைவி பொய்க்குநிலை கூறுகின்றான். இங்ஙனம் கூறுவது மதியம் தோன்றியபின்னும் மாலையுள்ளதென்பதைக் காட்டாதா? இன்னும் உதயணன்கதையிலும், இப்படியே அந்திமாலை வருணனையிலே, 'குடைவீற்றிருந்த குழவிபோலச் செங்கோட்டிளம்பிறை செக்கர்த்தோன்றி மதர்வையோர்கதிர் மாடத்துப் பரப்ப……பொய்க்கொடிபகரவும்," என்பதும் இதனை வலியுறுத்தும்.



இனி களவெண்பாவிலே,

"கருவிக்கு நீங்காத காரிருள்வாய்க் கங்குல்
உருவிப் புகுந்ததா லூதை—பருகிக்கார்
வண்டுபோ கட்ட மலர்போன் மருண்மாலை
உண்டுபோ கட்ட உயிர்க்கு."

என்னுஞ் செய்யுளில் மருண்மாலை உண்டுபோகட்ட வுயிரை, நடுயாமத்தில் ஊதை உருவிப்புக்கது எனக் கூறுமாற்றானும், மாலை 10 மணி வரையுள்ள காலம் என்பது பெறப்படும். இன்னும் பிள்ளையவர்கள் கருத்தின்படி, முதல்யாமம் 7½ நாழிகையாகும். அம்முதல் யாமமே மாலையாமமுமாம். மதுரைக்காஞ்சியிலே, "பகலுருவுற்ற இரவுவர—மாலைநீங்க" என்பது, இரவு வரும்படி மாலைநீங்கலால், "முந்தையாமம் கழிந்தபின்றை" என முடிதலால், மாலையாமமே முந்தையாமமாம். அது மாலையாமம் என்ற பெயரானும் பெறப்படும். நான்காம்யாமமாகிய வைகறையாமத்தையும் பிள்ளையவர்கள் 7½ நாழிகையென்று கூறியிருக்கிறார்கள். அங்ஙனமாக இங்கேமாத்திரம் மாலை சிறுபொழுது எனக் கூறுவது பொருந்துமா? பிள்ளையவர்கள்கருத்தின்படி மாலையாமம் ஒன்பதுமணிவரை யாகின்றது. அப்பால் 1 மணி கூட்டிப் பத்து மணியென்றால் பிள்ளையவர்களுக்குப் பொருந்தாதாம்; பால்கறக்குமுடியாது; மின்சாரவிளக்கு வேண்டும் என்பது அறிஞரை மயக்கமாட்டாது.

இனிப் பிள்ளையவர்கள். வைகறையும் விடியலும் ஒன்றெனப் பல உதாரணங்கள் காட்டுகிறார்கள். யாம் வைகறை வேறு, விடியல் வேறு என்று கூறியதன்றி, வைகறைக்கு விடியல் என்று பெயரில்லையென்று மறுக்கவில்லை. இது, இருள்புலர்காலமாதல்பற்றி, வைகறையையும் ஓரோவழி விடியல் என்று கூறுவதுபற்றி, விடியல், வைகறையாகாதென, யாமே 'சிறுபொழுது' என்னும் அவ்விஷயத்திற். கூறியிருத்தலால் அறியப்படும். வைகறைக்கு விடியல் என்று பெயர்வருவதால், விடியல் என்பது, நாள்வெயிற்காலையன்று என்பது போதாது. இதற்கு, குறிஞ்சிக்கலியுள்வரும், 'விடியல் வெங்கதிர்காயும்' (சரு) என்பதே தக்க பிரமாணமாம். தாம் பிடித்ததையே சாதிக்கும்பொருட்டு, அவ்வடிக்கு 'விடியற்பின்னர்த்தாகிய வெங்கதிர்' எனப் புரட்டிப் பொருள்கூறியது

னால் அதனை அறிஞர்கள் ஒப்புவார்களா? சுவாமிகள்கூறிய பொருளை நோக்கும்போது, விடியல் என்னுஞ்சொல் பயனின்றி நின்று வற்றுகின்றதன்றோ? இது, பாடிய புலவனுக்கு அறியாமையை விளைவிப்பதன்றோ? ஏனெனின்; ‘காலை வெங்கதிர்’ எனப் பாடமுடியாது, ‘விடியற்பின்னர்த்தாகிய வெங்கதிர்’ என்னும் பொருள்பட, “விடியல் வெங்கதிர்” எனப் பாடினன் எனப் புலப்படுத்தலின். இங்ஙனம் புரட்டிக்கூறியது சுவாமிகளுடைய சாதிப்பையுணர்த்துமோ? புலவனுடைய அறியாமையையுணர்த்துமோ? அறியேம். இதனை, அறிஞர்கள் இதுவரை சிந்தித்திருப்பார்கள் என்றே எண்ணுகின்றேம்.

இன்னும், விடியல் என்பது நாள்வெயிற்காலைக்குப் பெயராதலை, அகநானூற்று ௬௩-ம் செய்யுளில்,

“கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
முடங்குதா ளுதைத்த பொலங்கெழு பூழி
பெரும்புலர் விடியல் விரிந்துவெயி லெறிப்பக்
கருந்தார் மிடற்ற செம்பூட் சேவல்
சிறபுன் பெடையொடு குடையு மாங்கண்.”

என்பதில், விடியலில் வெயிலெறிப்பச் செம்பூழ்ச்சேவல் பெடையொடு பூழியிற் குடையுமாங்கண், என வருதலாற் காண்க. வெயிலெறிப்பக் குடையும் என்பது, மண் ஈரமின்றிக் காய்ந்து புழுதியானபின் குடையும் எனறபடி முற்கூறிய செய்யுளும் இதுவும் நாள்வெயிற்காலையே விடியல் என்பதை வெள்ளிடைமலைபோலக் காட்டவில்லையா? இங்கும் ‘விடியலின்பின்னர் விரிந்து வெயிலெறிப்ப’ எனப் புரட்டிவிட்டால் நாம் விழிக்கவேண்டியதுதான். நிற்க.

“வெங்கதிர் தோன்றி விடிந்ததையன்றே” என்பது யாம் முன்னர்க்காட்டியதோர் உதாரணம். அதனைப் பிள்ளையவர்கள் சுவாமிகளினும் பெரும்புரட்டாகப் புரட்டுகிறார்கள்; வெங்கதிர் தோன்றி விடிந்தது என்பதில் தோன்றி, என்னுஞ் செய்தெனெச்சம் பிறவினையொடு முடியாதாகலின் ‘தோன்றும்படி விடிந்தது’ என்கிறார்கள். அங்ஙனேல், கதிர்தோன்றல் விடிதற்குக் காரணமன்று, விடிதலே தோன்றுதற்குக்காரணமென்பதாகின்றது. இந்த விநோதத்தை அறிஞர்கள் நன்கு சிந்திப்பார்களாக. பிள்ளையவர்கள் தோன்றி என்னும்



செய்தெனெச்சம் ஏதுப்பொருட்டாய்நின்று தோன்றுதலால் விடிந்தது எனப் பொருள்படும் என்பதை அறிந்தும், தோன்றும்படி விடிந்தது எனப் பொருள்கொண்டதே அவர்கள் மாறுபாட்டை நன்கு விளக்கிவிட்டது. ஐங்குறுநூற்றில் “கொடிப்பூ வேழந் தீண்டி யயல—வடிக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கும்—மணித்துறை யூரன்” என்பதில், தீண்டி என்பது தீண்டுதலால் என ஏதுப்பொருட்டாய் நின்று நுடங்கும் என்பதனொடு முடிந்ததுபோல, இதுவும் முடிந்தது என்க. ஆதலால், நாம் முன்னர்க்காட்டிய அச்செய்யுளிலுள்ள ‘விடிந்தது’ என்பதும் நாள்வெயிற்காலையை புணர்த்தல் மலைவிளக்கேயாம். தொன்னூல்விளக்கத்திலும் வீரமாமுனிவர் விடியலை ‘எற்றோற்றம்’ என்பார்.

இன்னும், உதயணன்கதையில் வரும், “கடுங்கதிர்க் கனலி கால்சீத் தெழுதரா—விடிந்தது மாதோ விடலிருள் விரைந்தென” என்பதுமது. இன்னும், இராமாவதாரத்துச் சூர்ப்பநகைப்படலத்தில்வரும்,

“ஆன்ற காத லஃதுற வெய்துழி
மூன்று காலமு மூடு மரக்கரம்
ஏன்ற காரிரு ணீக்க விராகவன்
தோன்றி னானென வெய்யவன் தோன்றினான்”

எனக்கூறியபின், “விடியல் காண்டலி னீண்டுதன் னுயிர்கண்ட வெய்யாள்” எனக்கூறலின் விடியல் என்பது நாள்வெயிற்காலை என்பதைக் ‘கரதலாமலகம்’போல விளக்கல் காண்க. இன்னும் இராமாவதாரத்து யுத்தகாண்டத்திலே, இரவிற்சென்ற அநுமன் மேருவுக்கப்பாற்சென்றபோது சூரியனைக்கண்டு, ‘உதயமாயிற்று; விடிந்தது’ என மயங்கினனென,

“அத்தடங் கிரியை நீங்கி அத்தலை யடைந்த வண்ணல்
உத்தர குருவை யுற்று ஞெளிபவன் கரங்க ளுன்றிச்
செற்றிய விருளின் றாக்கி விளங்கிய செயலை நோக்கி
வித்தகன் விடிந்த தென்னா முடிந்ததென் வேக மென்றான்.”

என்றும், பின், ‘சூரியன் மேற்றிசையிற்றோன்றுகின்றான்; ஆதலால் விடிந்ததுமன்று, இது மேருவுக்கிப்பால்வந்ததன்காரணமென்றுதுணிந்தான் எனக்,

"காற்றிசை சுருங்கச் செல்லுங் கடுமையான் கதிரின் செல்வன்
மேற்றிசை யெழுவா னல்லன் விடிந்தது மன்று."

என்றுங் கூறுதலானும், சூரியோதயமே விடியல் என்பதைப் பிள்ளையவர்கள் சொல்லியவாறு சீமைரசம்பூசிய கண்ணாடிபோற் காட்டிவிடுகின்றது. இச்செய்யுளில் அநுமன் சூரியன் மேற்றிசையில் உதிப்பவனல்லன்; ஆதலால் விடியவில்லை, என்பதனால் விடியல் வைகறையன்றென்பதை நன்கு விளக்கிவிட்டது. ஆதலால்; விடியல்—சூரியோதயமே" என்று முன்னரினுந் தடித்தஎழுத்தில் யாம் எழுதுதற்கும் யாதொருதடையின்மையுங் காண்க. இங்ஙனமாகப் பிள்ளையவர்கள், 'ஐயரவர்கள் விடியல் சூரியோதயமென்று கூறியது காக்கையை வெள்ளை போலு' மென்றதும் வியக்கத்தக்கது.

இன்னும், பெருந்தேவனார்பாரதத்துள், "தாழ்வரையி னுச்சி, வலந்திரிவான் றோன்றினன் வந்து" எனக் கூறிப் பின், "மால்களிறும் பாய்மாவும்" என்னுஞ் செய்யுளில், "வெங்களங்கைக் கொண்டார் விடிந்து" எனக் கூறியதுாஉம், விடியல்—சூரியோதயமே என்பதைச் சிலையிலெழுத்தாகநாட்டுதல் காண்க. சூரியோதயத்தின்பின்னேயே போர்க்குச் செல்வதை,

"பைய விருளோடிப் பாய்கதிரோன் பொற்கடலில்
வெய்ய கதிர்தோன்றி விட்டெறிப்ப—வெய்யமுனைப்
போர்வேந்த ரகத்துப் போர்க்களங்கைக் கொண்டார்கள்
பார்வேந்த ரெல்லாம் பார்த்து."

என்பதனால் நன்குதெளியப்படும்.

இன்னும், இப்படிப் பல செய்யுள் அந்நூலுள் வருகின்றன. அவற்றையும் நோக்கிக்கொள்க. இராமாவதாரத்தினும், "கதிரவனுதயஞ் செய்தான்" என்று கூறிப் பின், "வளைத்தனர் விடியத் தத்தம் வாயில்கடோறும் வந்து" எனக்கூறுதலாலும் காண்க. இனி, வைகறையாமம் என வழங்குவதன்றி, விடியல்யாமம் என வழங்குவதாகவுந் தெரியவில்லை.

இங்ஙனமே, விடியல் நாள்வெயிற்காலைக்குப் பெயராதலை நோக்கியே 'வைகறை விடியல்' என்பதற்கு வைகறையும், விடியலும் என இளம்பூரண அடிகளும், 'வைகுறுவிடியல்' என்பதற்கு வைகுறுவும், விடியலும் என்று நச்சினார்க்கினியரும் இடம்நோக்கிப் பொருள்கூறினார்கள். செவியறிவுறூஉ, என்பது செவியறிவுறுத்தலை உணர்த்தினாற்போல வைகுறு, வைகுறுதலை யுணர்த்திநின்றது என நச்சினார்க்கினியர் கூறினமையானே 'வைகுறூஉவிடியல்' எனவும் பாடங்கொள்ளலாம். ஒரு, ஒரூஉ எனவும், மரு, மரூஉ எனவும் நின்றாற்போல உறு, உறூஉ எனவும் நிற்கும். "மரூஉவும்" என்றும், 'மருவின்பாத்திய' என்றும் வருவனவற்றை நோக்குக. 'வைகறைவிடியல்' என்பதற்கு, 'வைகறையாகிய விடியல்' எனக் கொள்ளில் விடியலோடு சம்பந்தப்படும் ஊடலுக்குப் பொருந்தாதாகலின், அது பொருந்தாதென்க. அன்றியும், மருதத்திற்கு விடியல்கொள்ளும் புறப்பொருளோடும் மாறுபடும். ஆதலின், அகத்திணை புறத்திணை என்னும் இரண்டிற்கு மேற்பத் தொல்காப்பியர் கூறிய உண்மைப்பொருளையுணர்ந்தே உம்மைத்தொகையாக உரைத்தார்கள் என அறிக. இதனை நன்கு ஆராய்ந்துணர்ந்த அறிஞர் புதுப்பொருளென்பாரா? ஸ்ரீசுவாமிகள் கூறியதே புதுப்பொருளாகும். காலநியமங் கூறும் ஒரு சூத்திரத்திக்கண், எடுத்துக்கோடற்கண்ணேயே வைகறை என்றுவது, விடியல் என்றுவது தனித்துக்கூறமுடியாமல் வைகறை என்று அடைமொழிபுணர்த்தி வைகறைவிடியல் என்றார் என்றலும், வைகுறுவென அடைபுணர்த்தி வைகுறுவிடியல் என வினைத்தொகையாக்கிக் கூறினாரென்றலும் ஆசிரியர்புலமையை இழிவுபடுத்தலின், உம்மைத்தொகையென்பதே ஆசிரியர்கருத்தென்பது துணிபாம். ஏனைய பொழுதுகளும் அடையின்றிக் கூறுதலும் நோக்கத்தக்கது. செய்யுளாயின் அடையொடு கூறினாரென்றல் சாலும்.

இங்ஙனமாகப் பிள்ளையவர்கள் அகப்பொருள்விளக்கநூலாரை இலக்கணவிளக்கநூலார் மறுத்த மறுப்பை மனத்துள்வைத்துக்கொண்டு ஸ்ரீ சுவாமிகள் எழுதிய மறுப்பை மெய்யென்று தாபிக்கப்புகுந்தது பெருந்துக்கமே.

இனி, ஊடல் விடியற்காலத்தும் நிகழும் என்பதற்கு நச்சினார்க்கினியர் காட்டிய உதாரணங்கள் இரண்டு, அவையாவன:—

"தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
குணங்களைப் பாராட்டுந் தோழவர் நீயானசொல்

> கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்துஞ்சி
> அணங்குபோற் கமழுநின் வலர்மார்பு காணிய."

என்பது ஒன்று. இதில் "அணங்குபோற் கமழுநின் வலர்மார்பு காணிய" என்பதற்கு, 'கமழுமார்பு' என்றது, 'அணங்குபோற் கமழுமார்பு' என்றமையினாலே நாற்றச்செவ்விபெறுதலின், காலை என்றார். நாற்றச் செவ்வி என்றது புதுமணம் என்பதைக் குறித்தது. வைகறையில் விரிந்த புதுப்பூவும் புதுச்சாந்து மணிந்து பரத்தையரைப்புணர்ந்து விடியற்காலத்து வந்தமையின் அங்ஙனங்கூறினாள் என்பது கருத்து. அங்ஙனமாதல் "வைகறைக்காலத்து மனைவயிற்செல்லாது இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி அதனினுமமையாது பின்னு மவரைப் புணர்வதற்குச் சூழ்ந்து திரிகின்ற" என்னும் இதன்கண்வரும் உள்ளுறையானும் விளங்கும். அங்ஙனேல் மேன் மக்களாதலின் வைகறையில் வருவர் என்பதனோடு மாறுபடாதோ எனின், அது பெரும்பான்மைபற்றிக் கூறியதேயாம். ஆதலின் மாறுபடாதென்பது. அங்ஙனமாகத் தோழி நாற்றத்தால் அறிந்து வைகறையிற் கூறினாளென்றல் பொருந்துமா? அணங்குபோற் கமழும் என்பதில், பச்சைப்படி கூறியது ஒன்றுமில்லை.

மற்றொன்று,

> "காலை எழுந்து கடுந்தேர் பண்ணி
> வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
> மல்ல லூரன் எல்லினன் பெரிதென
> மறுவருஞ் சிறுவன் றாயே
> தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே"

என்பது. இதன்கண்வரும் "காலை" என்பது பற்றி நச்சினார்க்கினியர் காலைவந்தது என்று கூறினாரல்லர். யாம் அப்படிக் கூறவுமில்லை. அங்ஙனமாகப் பிள்ளையவர்கள் வேண்டியதன்றான பெரிய விரிவுரை நிகழ்த்திக்காட்டுதல் என்னையோ? இதனுள்வரும் 'எல்லினன்பெரி' தென்றமைகொண்டே நச்சினார்க்கினியர் காலையென்றனர். 'எல்லினன் பெரி'தென்றதற்குப் பொருள் 'விளக்கமுடையன் பெரிதும்' என்பதேயாம். விளக்கமுடையன் பெரிதும் என்று அறியக்கிடந்தது அவன்



வந்த காலைபோதலின் காலை என்றார். நீராட்டக்கொண்டுபோய காலையன்று. எல்-விளக்கம். 'எல்லேயிலக்கம்' என்னுந் தொல்காப்பியத் தூச்சூத்திரமும் அதனை வலியுறுத்தும். தலைவன் பரத்தையைப் புணர்ந்து மேனிவிளக்கமின்றி வந்தானாகலின் அங்ஙனங் கூறினாள். இதனை மருதக்கலி 10 ம் செய்யுளில் வரும் 'எல்லினை வருதி யெவன் குறித்தனை' என்னும் அடியும் அதன் உரையாகிய 'வருவையயர்ந்தபின் விளக்கத்தினையுடையையாய் வாராநின்றாய்' என்பதும் வலியுறுத்தும். இங்ஙனமே களவிற் கூடிவரும் தலைவியைத் தாய் 'பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென—ஆகத் தரும்பிய சுணங்கும் வம்புடைக்—கண்ணுருத் தெழுதரு முலையு நோக்கி—எல்லினை பெரி' தெனக் கூறியதும் இதனை வலியுறுத்தும் என்க.

இங்ஙனமாகவும் பிள்ளையவர்கள், 'எல்லினன் பெரி'தென்றதற்குக் குறிப்பாற் சிறுமையுடையன் பெரிதும் எனத் தாமே காலையென்பதை மறுத்தற்கு ஒரு புதுப்பொருள் படைத்து மொழிந்துவிட்டு "ஐயரவர்கள் புதுக்கருத்தைத் தாபிக்கவந்ததன்று" எனப் புதுப்பொருள் கூறலை எம்மேலேற்றுதல் நீதியாகுமா? அறிஞர்கள் இதனைச் சிந்தித்துப் பார்க்க.

இன்னும், அகநானூற்று ௬௬-ம் செய்யுளில்,

> "புகுவாய் வாரா அற் பல்வரி யிரும்போத்துக்
> கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி
> யாம்பன் மெல்லடை கிழியக் குவளைக்
> கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்தெழுந்து
> .... .... .... .... .... .... .... ....
> நாட்கய முழக்கும் பூக்கே ழூர"

என்பதன்கண் காலை நிலத்திற் கடைபாய்வந்ததன்றி, இதன் உள்ளுறையாலும் காலையில் வந்து "நாங்கள் நமது நிறங்கண்டு வருந்த எல்லாருமறியக் கலக்குவான் ஒருவனல்லனோ" என அக்காலை நன்கு தோன்றல் காண்க.

இனி வைகறைக்கண்ணும், விடியற்கண்ணும் தலைவி ஊடலுற்றுச் சாராதவழிப், பாணன் விறலி முதலியோரை விடுத்து உணர்த்தி, அவ்வளவினும் உணராதவழி விருந்தொடுபுக்கும் உணர்த்துவான் எனப்

பொருளிலக்கணநூலுடையார்கள் கூறலின், ஆண்டும் விடியற்காலம் மருதத்துக்குளதாதல் பெறுதுமாதலின், மருதத்துக்குக் காலையில் லென்றல் எவ்வாறு பொருந்தும். "உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது—மிக்கற்றா னீள விடல்" என்னும் விதி உடன் உணர்த்த உணருங் காமத்திற்கன்றி, உணர்ப்புவயின்வாரா ஊடலுக் கன்றாம். உணர்ப்புவயின் வாரா ஊடலும் இருவகைப்படும் ஒன்று விருந்துமுதலிய கண்டு தணிவது. மற்றது அதனானுந் தணியாதது. இவை முறையே சிறுதுனி எனவும், பெருந்துனி எனவும் படும். இவற்றுள் முந்திய சிறுதுனி பெருங்கலாம் எனப்பட்டுப் புணர்ச்சிக்குவேண்டியதொன்றாகின்றது. இதனையே, வள்ளுவனார், "துனியும் புலவியு மில்லாயிற் காமம்—கனியுங் கருக்காயு மற்று" என்றதனுள் துனி என்றதூஉம். ஏனைப் பெருந்துனி இன்பந்தாராமையின் அது இன்பத்துக்கு வேண்டப்பட்டதொன்றன்றென்பர் பரிமேலழகர். இதனானே தேவர்கருத்தோடும் மாறுபடாமை யுணர்ந்துகொள்க. காலையில் விருந்துகண்டு ஊடல் ஒளித்தமைகண்ட தலைவன், இன்னும், "வருகதில் லம்ம விருந்து" என விருந்தினைப் புகழ்ந்துகூறலை,

"தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண்டொறும் யாத்த காண்டகு நல்லிற்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை யீர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண் டமர்த்த கண்ண டகைபெறப்
பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்விய
ரந்துகிற் றலையிற் றுடையின னப்புலத்
தட்டி லோளே யம்மா வரிவை
யெமக்கே, வருகதில் விருந்தே சிவப்பா னன்று;
சிறியமுள் ளெயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே." (நற்றி ௧௨0)

என்பதனானறிக. இது ஒன்றும் காலையில் விருந்தொடுவந்து ஊடல் தணித்தலைக் காட்டாதா?



இங்ஙனமே, ஊடல் நீட்டித்தலும், நீட்டித்தவழி விருந்துமுதலியவற்றாற் றணித்தலும், விடியலில் நிகழ்தல்பற்றியே, இளம்பூரண அடிகளும் "தலைவி ஊடலுற்றச் சாரகில்லாளாம்" என்றும் நச்சினார்க்கினியரும் "மெய்வேறுபாடுவிளங்கக்கண்டு வாயில்புகுத்தலின் என்றுங் கூறினார்கள். கூட்டம் நிகழ்தலின்றேவெனின், அது இருவருள்ளமும் ஒருப்பட்டவழி, உரியகாலத்தே நிகழும் என்க.

இனிப் பிள்ளையவர்கள் நாம், நக்கீரரும், குறுந்தொகைநூலாரும் முறையே, வைகறையுள் விடியலை யடக்கியும், எற்பாட்டை மாலையுளடக்கியும் கூறியதாகக் கூறியது தவறு என்றும், சங்கப்புலவர்கள் தாங்கள் பொருள்களைஎண்ணிச்செல்லும்போது ஒன்றைஒன்றுள் அடக்கிக்கூறும் வழக்கில்லை என்றும், அது முரஞ்சியூர் முடிநாகராயர், "மண்டிணிந்தநிலனும்..........நீரும்" எனப் பஞ்சபூதங்களை எண்ணலால் அறியப்படும் என்றும் அதனால் ஒன்றை ஒன்றனுள் அடக்கினாரென்றல் பொருந்தாது என்றுங் கூறினார்கள். அஃதுண்மையே நிலமுதலிய ஐந்துந் தனித்தனி பொருளாதலின், அவற்றைச் சொல்லுங்கால் ஒன்றுள் ஒன்றை அடக்கல் முடியாதுதான். காலம் என்பது ஒரு தனிப்பொருளாதலின், அதன் பகுப்புக்களுள் ஒன்றை ஒன்றுள் அடக்கிக்கூறலாம். சிலர் குணம் எட்டெனச் சிலர் அவற்றை ஆறுள் அடக்குவர். இந்திரன் வேற்றுமை எட்டெனப் பாணினி விளியைப் பெயருளடக்கி ஏழென்பர். தொல்காப்பியர் தொழின்முதனிலை எட்டென நன்னூலார் ஆறு என்பர். அகத்தியர்,

"ஆறு மாறு மொடுவு பேரடுவும்
சாலு மூன்றும் வேற்றுமைத் ததுவே
செய்வோன் காரணஞ் செயத்தகு கருவி
எய்திய தொழின்முத லியைபுட னதன்பொருள்."

என்று மூன்றும்வேற்றுமைக்கு நான்கு உருபும், பொருள் ஐந்துங் கூறத் தொல்காப்பியர் "மூன்றாகுவதே—ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி—வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே" என உருபு ஒன்றும் பொருள் இரண்டுங் கூறுவர். நன்னூலார் பொருளை மூன்றுள் அடக்குவர். ஆதலின் யாமு மங்ஙனே கூறினோம். அங்ஙனமாகப் பிள்ளையவர்கள் ஒன்றை ஒன்றுள் அடக்கல் சங்கநூலார்வழக்கன்று என்பது எவ்வாறு பொருந்தும்,

இன்னும் பிள்ளையவர்கள், நக்கீரனார், வைகறையாமம் சிறுபொழுது எனக் கூறிவிட்டு, விடியலுமடங்க 'வைகறைவிடியல்' என உதாரணங் காட்டினாரென்றல் பொருந்தாதென்கிறார்கள். ஆயின், நக்கீரனாரே ஒன்றெனக்கருதி அதனைக்காட்டினாரென்றலும் பொருந்தாது. அவருரைக்கண் அச்சூத்திரங்கள் பிற்காலத்தாரால் சேர்க்கப்பட்டனவேயாம். அன்றியும், இறையனாரகப்பொருளுரை அவருரையன்றெனச், சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும் என்ற நூலிலே மஹாமஹோபாத்தியாய, உ. வே. சாமிநாதையரவர்களும், தமிழ்வரலாற்றிலே ஸ்ரீநிவாசபிள்ளையவர்களும் உரைக்கின்றார்கள். ஆதலின் அதன்கண் ஆராய்ச்சி முடிவு போகாதென விடுக்கதும்.

மேலும், அடியார்க்குநல்லார், பதிகவுரையில் எற்பாடும் அமையச் சிறுபொழுது ஆறு என்று கூறினமையின் நெய்தற்கு எற்பாடு கூறினார் என்றும். அதனைப் பதிக உரையை நன்குபடித் தறிக. பின் சிலப்பதிகாரத்துள் வந்த சிறுபொழுதுகளைக் கூறுமிடத்தே மாலை கூறினார். யாம், "எற்பாட்டை மாலையுள் அடக்கியகருத்துடையாரயே சிலப்பதிகாரவுரையாசிரியர்; முன்நெய்தற்கு எற்பாடுகூறிப், பின் 'வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை' என்பதை எடுத்துக்காட்டினார்" என்றும். இதனை விளங்காது பிள்ளையவர்கள், "சிலப்பதிகார உரையாசிரியர் நெய்தற்கு எற்பாடு கூறவுமில்லை, "வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலை" என்னுமடியை உதாரணமாகக்காட்டவுமில்லை" என்றல், யாம் எழுதியதை விளங்கிக்கொள்ளாமையே.

இனிப் பரிபாடலில் வந்த கிரகநிலை ஆவணிமாதத்துப் பூரணையிலன்றுலந்த கிரகணநேரம் கூறியதாதலின், சூரியன் நிற்க என்றதனால் எற்றோற்றம் என்றும். ஏனெனின், ஆவணி மாசத்திலே சூரியன் சிங்கராசியிலே உதயமாதலின், இதன்கண் நிகழும் ஆட்சேபம் என்னையோ? நிற்க;

இனிப் பிள்ளையவர்கள் 'எற்பாடு' என்பதற்கு ஸ்ரீசுவாமிகள் கூறியவாறு காலை என்பதே பொருத்தம் என்கிறார்கள். அதனுண்மையையுமாராய்வாம்.

அகப்பொருளிலக்கணஞ் சொன்ன ஆசிரியர்களெல்லாம் நெய்தற்குச் சிறுபொழுது கூறுங்கால் 'எற்பாடு' என்னுஞ் சொல்லையே எடுத்



தாண்டனரன்றிக் 'காலை' என்பதை ஒருவராயினும் எடுத்தாளவில்லை. அகப்பொருள்விளக்கநூலாரும், 'எற்படுகாலை' எனவும் 'வெய்யோன்பாடு' என்றுங் கூறினான்றிக் 'காலை' என்று கூறிற்றிலர். பிள்ளையவர்களோ 'எற்படுகாலை' என்பதில், காலை என்பது காலையையுணர்த்த, 'எற்படு' என்பது அதற்கு விசேடணமாகவந்தது என்கின்றனர். 'காலை' என்பது ஈண்டுக் காலம் என்னும் பொருளில் வந்ததன்றிக் 'காலை—சூரியோதயம்' என்னும் பொருளில் வந்ததன்று. அஃது ஆசிரியரே பின்னும் 'இருள்புலர்காலை' எனக் கூறுவதால் அறியலாம். எனவே 'எற்படுகாலை' என்பதற்குப் பொருள் 'எற்படுகாலம்' என்பதேயாம். பழைய உரைகாரரும் 'ஆதித்தன் படுகிறபொழுது' என்றே கூறுதல் காண்க. இங்ஙனமாக, காலை—என்பதற்குச் சூரிய உதிக்குங்காலம் என்று திரிபுபொருளைக்கொள்ளல்வேண்டும். திரித்துப்பொருள் கொண்டு செந்தமிழ்வழக்கைச் சிதைப்பது தருமமா? அந்தோ! இது மிக இரங்கத்தக்கது, நிற்க:

எற்படுகாலை என்பதற்கு எற்படுகாலம் என்பதே பொருளென்பது மேற்கூறியவாற்றாற் பெற்றாம். இனி எற்படுகாலம் என்பதுதான் எப்பொழுதை உணர்த்திவந்ததென்பதே ஆராயத்தக்கது. அகப்பொருள் விளக்கநூலார் எற்படுகாலம் என்பதைக் 'காலை' என்று கருதியிருப்பாராயின், பின்னும் 'வெய்யோன்றோற்றம்' என விளக்கக்கூறியிருப்பார். அங்ஙனம் கூறாமல், பின்னும் 'வெய்யோன் பாடு' என்றே கூறினமையின் இருவகைவழக்கினும் எளிதுணரநின்ற பொழுதுபடுதலையே கூறினார் என்பது துணிபாம். 'எற்பாடு' என்னுஞ் சொல், சூரியோதயத்துக்கும் பெயராய் வருதலின் 'ஞாயிறுபடுதல்' என்று எங்ஙனந் துணியப்படுமெனின், அச்சொல் சூரியோதயத்துக்கு, 'படுதல்—உண்டாதல்' என்னும் பொருளில் தாற்பரியமாய் அரிதுணரப்பட்டுச் செய்யுள்வழக்கிற் சிறுபான்மை வருதலானும், பெரும்பான்மையும் பொழுதுபடுதற்கே வழங்கிவருதலானும், உலகவழக்கில், 'பொழுதுபட்டுப்போயிற்று' என்றும், 'பொழுதுபடுங்காலமாயிற்று' என்றும், 'பொழுதுபாட்டுவாயை அடைந்தது' எனவும், 'சூரியன்பட்டுப்போயிற்று' எனவும், 'பொழுதுபடவந்தான்' என்றும், இப்படிப் பலவாறு வழங்கக்காண்டலானும், ஆட்சிபற்றி 'எற்பாடு' பொழுதுபடுதலென்று எளிதில் துணியப்படும்.

என்க. இனிச் சங்க விலக்கியங்களிலே, நெய்தற்கும் முல்லைக்கும் மாலை கூறுங்கால், அதற்குமுன் பொழுதுபடுதலைக் கூறும்பொழுதும் 'எற்பாடு என்னுஞ் சொல்லானே கூறக்காண்டலானும் தொல்காப்பியர் கருதியது பொழுதுபடுதலென்பதே துணிபாம். இங்ஙனமாகப் பிள்ளையவர்கள் 'எற்பாடு' காலையையன்றி மாலையையுணர்த்துமா? என்றல் எவ்வாறு பொருந்தும்.

இனி எற்பாடேயன்றி மாலைமுதலியனவும் நெய்தற்கு வருகின்றதே யெனின், அது மயக்கமாய்வரும். அவற்றுள்ளும், மாலை எற்பாடு சார்ந்துவரும் உரிமைபற்றி நெய்தற்குப் பெரும்பான்மையாயும் ஏனையவை சிறுபான்மையாயும் வருமென்க. அங்ஙனம் வருதல்பற்றி அவை உரியபொழுதாகாவென்க. அன்றியும்; இடையாமத்து நிகழும் புணர்ச்சியின்பின்னர், அதனால் நிகழும் ஊடல் வருதல்போல நடுப்பகலில் நிகழும் பிரிவின்பின்னர் அதனால் நிகழும் இரங்கல் வருதலும் முறையேயாமாதலானும் எற்பாடு பொழுதுபடுதலையேயுணர்த்துமென்பது துணிபாம்.

இனி, எற்பாடு என்னுஞ் சொல் பொழுதுபடுதலையே யுணர்த்திச் சங்கநூல்களில் வருமாற்றை, "பொழுதுபடப்பூட்டி" (நற் 187) என்றும், 'படுங்கதிரமையம்' (சிலப். புறஞ்சேரி கக) என்றும், 'படுகாலை' (சிலப்.-ஊர்சூழ். ரு-ம் அடி) என்றும், "எற்படவருதிமில்" (அகம். 190) என்றும், 'எற்படுபொழுதின்" (சிலப்.—ஊர்காண் அரு) என்றும், 'படுசுடரடைந்து' (நற்றிணை. கூரு) என்றும், 'படுசுடரமையத்து' (அகம். உரு) என்றும், "எற்பட, அகலங்காடி" என்றும், 'படுசுடர்மாலை' (கலி—130) என்றும், இப்படிப் பலவாக நூல்கடோறும்வருதலானறிக. இவற்றுள், 'படுகாலை' என்பதும், 'எற்படுபொழுது' என்பதும் அகப்பொருள் விளக்கத்துள்வரும் 'எற்படுகாலை' என்பதும் தம்முள் ஒப்பாதலுந் தெளிக. அன்றியும், 'எற்படக்—கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்' என்பது இடம்பற்றி உதயம் என்று பொருள்கொள்ளப்படும். சந்தர்ப்பம்வேண்டாமலே 'எற்பாடு' என்பது பொழுதுபடுதலையுணர்த்தும் ஆதலானும், எற்பாடு—பொழுதுபடுதலேயாம். அங்ஙனமன்று; 'காலை' என்பது தொல்காப்பியத்துக் கூறப்படாமையின் 'எற்பாடு' காலையே யெனின், விடியலெனக் காலைவந்தமையின் அது பொருந்தாது என்பது.



இனிக், காமந்தணியுங் காலமன்றிக் காமமிக்கு இரங்குங் காலமன்மையானும் (எற்பாடு) காலையன்றென்பது பெறப்படும். காலை, இரங்குதற்குரிய காலமன்று; காமந்தணியுங் காலமாதலை, "சேர்ந்த பள்ளி சேர்புணை யாகி—நீந்தி யன்ன நினைப்பின ராகி—முழங்குகடற் பட்டோர் ஆழ்ந்துபின் கண்ட—கரையெனக் காலை தோன்றலின்," என உதயணன்கதையில் வருமடிகளும், 'விடியல் காண்டலி னீண்டுதன் னுயிர் கண்ட வெய்யாள்' என்னும் இராமாவதாரச்செய்யுளடியும், "கண்டா வந்த காம வொள்ளெளி" என்னுங் குறுந்தொகைச் செய்யுளில் "குப்பைக் கோழித் தனிப்போர் பொலிவிளி—வாங்குவிளியினல்லது—களைவோ ரில்லை யானுற்ற நோயே" எனவருமடிகளும்,

"ஆக்க மித்திற மடைவுழிப் பத்துநூ றடுத்த
நோக்க முற்றவன் சசிபொருட் டுற்றநோ யதனை
நீக்கு கின்றனன் யானென நினைந்துளா னென்ன
மாக்கள் பூண்டதேர் வெய்யவன் குணதிசை வந்தான்."

என்றும்,

"ஞாயி றற்றவவ் வளவையி னனந்தலை யுலகி
லேயெ னச்செறி யிருளொலா மறைந்திருந் தென்னச்
சேய சிக்கணி தந்திடுந் தெளிவில்கா மத்து
மாயி ருட்டொகை யொடுங்கிய திந்திரன் மனத்துள்."

என்றும் வரும் கந்தபுராணச்செய்யுள்களும் "ஆழியொன்றீரடி" என்னுந் திருக்கோவைச்செய்யுளும் வலியுறுத்தும். இன்னும் இப்படிப் பல நூல்களிலும் வருகின்றன. இனி, இரவும் பகலு மிரங்கியதாகவும் வருகின்றதே யெனின் அது காலவரையறை கடந்துவந்த தணியாக் காமமேயாதலின் அதன்கணுசங்கையின்மை யுணர்க.

இனிப், பிள்ளையவர்கள், "ஐயாவர்கள்சொல்லியபடி 'எற்பாடு என்னுங் காலம் பகல் 2 மணி முதல் 6 மணிவரையுமுள்ள காலமாம்; இது பின்பகல், எற்பாடல்ல. பின்பகலை எற்பாடு என்று சொல்லி வருணித்த ஆசிரியர்கள் முன்னுமில்லை, பின்னுமில்லை. "உப்பின் குப்பை யேறி எற்பட—வருதிமி லெண்ணுந் துறைவனொடு" (அகம் 190) என மாலையில்வந்த திமிலையே எற்பட வருதிமில் என்கிறது.

எற்பாடும் மாலையும் ஒருபொருட்சொற்களே. இதனை, "மாலை வந்தன்று" (ஐங்குறு. 116) என்பதற்கு அதனுரையாசிரியர் எற்பாடு, என்று பொருள்செய்வதால் அறியலாம்" என்றார்கள்.

ஒருநாளாகிய காலத்தை, ஆறாகப் பகுத்து, விடியல், நடுப்பகல், எற்பாடு, மாலை, நடுநாள், வைகறை எனப் பப்பத்து நாழிகையாகக் கொண்டாலும் அவ்வக்காலங்களுக்குச் சிறந்தபெயர்க்காரணமான காலங்களையே புலவர்கள் எடுத்துப் பெரும்பாலும் வருணிப்பது வழக்கம். வைகறையெனின் கோழிகூவும் நேரத்தையும், விடியல் எனின் சூரியோதயத்தையும், நடுப்பகல் எனின் உச்சிக்காலத்தையும், எற்பாடு எனின் பொழுதுபடுநேரத்தையும், மாலையெனின் அந்திமாலையையும், யாமமெனின் பானாளையுமே எடுத்து வருணிப்பர். அதுபற்றியே, புலவர்கள் சூரியாஸ்தமனம் வருணித்துப் பின் அந்திமாலையை வருணிப்பதாம். அங்ஙனமாக, பிள்ளையவர்கள் பின்பகலை எற்பாடு என்றுசொல்லி வருணித்த ஆசிரியர் முன்னுமில்லை; பின்னுமில்லை என்பது பொருந்துமா? மாலை சூரியாஸ்தமனத்துக்கும் இரவுக்கு மிடைப்பட்ட பொழுதே என்ற பிள்ளையவர்கள் எற்பாடும், மாலையும் ஒன்றென்றல் பொருந்துமா? ஐங்குறுநூற்றில் மாலையை எற்பாடு என்றாரல்லர்; அது மாலைவந்துவிட்டது என்று எற்பாட்டிற்கூறி இரங்கியதேயாம் அங்ஙனமாதல் அதன்கண் "எற்பாட்டின்கண் தலைமகன் சிறைப்புறத்தானிற்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது" என்று கூறுதலாலு மறியப்படும்.

இதுபற்றியே எற்பாடு என்பதற்கு, அரும்பதவிளக்கமெழுதியோரும் மாலை என்று கூறாமல் சூரியாஸ்தமயனம் என்று கூறியதும். இங்ஙனமே மாலைவருதலைநோக்கி, "நினையுமென் னுள்ளம்போல்" (140) என்பதனுள்,

"போயவெண் ணொளியேபோல் ஒருநிலையே பகன்மாயக்
காலன்போல் வந்த கலக்கத்தோ டென்றலை
மாலையும் வந்தன் றினி"

என எற்பாட்டிலே, கூறுமாறறிக. இன்னும் இது எற்பாட்டிற் கூறியதென்பது, பின்,



"இருளொடியா னீங்குழப்ப வென்னின்றிப் பட்டாய்
அருளில்லை வாழி சுடர்"

எனவரும் சூரியாஸ்தமனக்கூற்றால் விளங்கும். ஆதலானே எற்பாடு வேறு, மாலை வேறு என்பது துணிபாம். 'எற்படவருதிமில்' என்பதற்குப் 'பொழுதுபட வருந் திமில்' என்பதன்றி, மாலை வருந் திமில் என்பது பொருளன்று; எற்பட என்பது நிகழ்காலமாதலின். மாலை எனின், 'எற்பட்டபின வருதிமில்' என்பர். கலியினும், 'என்னின்றிப் பட்டாய்'என்றும், கோவையினும் 'பகலோன் கார்தனன்'என்றுங் கூறுமாறறிக. எற்பட வருதிமில் எனபதற்குப் பொழுதுபடுநேரம் வருந் திமில் என்பது பொருளாயினும், அது அதன்முன்னும் வருமென்பதையும் குறிக்கும்; சிலபோது பின்னும் வரும். அதுபற்றி இங்கு ஆராய்ச்சியின்று. சேனாவரையரும் 'ஞாயிறு டவந்தான்' என்பது நிகழ்கால முணர்த்துமென்றும், 'ஞாயிறுபட்டுவந்தான்' என்பது இறந்தகால முணர்த்தும் என்றுங் கூறுதல் காண்க. 'பட்டு—பட்டபின்.)

இனி 2 மணி தொடங்கி 6 மணிவரையுமுள்ள எற்பாடுகூறிவருணித்த ஆசிரியர் முன்னுமில்லை; பின்னுமில்லை என்றார்கள். அக்காலத்துத் தலைவி இரங்கல்கூறுவதன்றி மணித்தியாலங் கூறி வருணிப்பதில்லை. அங்ஙனம் எற்பாட்டில் தலைவி இரங்கல் கூறுவதையுங் காட்டுதும்:— திருக்கோவையினுள்வரும் ஒருவழித் தணத்தற்பிரிவிலே, "கார்த்தரங் கந்திரை தோணி சுறா" என்னுஞ் செய்யுளில், படப்போகின்ற சூரியனைப் பார்த்துத் துறைவர்போக்கும் அவர் சூளுறவும் என்னை வருத்தாநின்றன; அதன்மேலே நீயு மேகாநின்றாய். யான் இனியுய்யுமாறென்னோ? எனப் புலம்புமாற்றை, "துறைவர்தம் போக்குமிக்க தீர்த்தரவ கன்றில்லைப் பல்பூம் பொழிற் செப்பும் வஞ்சினமும், மார்த்தரங் கஞ்செய்யு மாறுய்யு மாறென்கொ லாழ் சுடரே" என்று கூறுதலானும், பின், மாலை வருதலைநோக்கிப்,

"பகலோன் கார்தனன் காப்பவர் சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோனெவ ரும்புகலத்
தகலோன் பயிறில்லைப் பைம்பொழிற் சேக்கை சேறக்கினவர்
துகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே"

என்றுகூறுதலானும், முறையே எற்பாடும் மாலையுங் கூறப்பட்டன. இங்ஙனம் பாலையினும், பொழுதுபடுதலாகிய எற்பாட்டினும் இரங்கல் கூறிய ஆசிரியர், அதன்முன், கடலிறைத்து வருந்தலும், அதன்முன், 'கடலொடுகூறிவருந்தலும், அதன்முன் அன்னமொட்டாய்தலும், அதன்முன் கடலொடுபுலத்தலும், அதன்முன் கடலொடு வரவுகேட்டலும் கூறலின் இவையெல்லாம் பொழுதுபடுவதற்குமுன் எற்பாட்டிலே தலைவி இரங்கல் கூறுவதன்றோ! இன்னும், நாலடியாரிலே,

> "செல்சுடர் நோக்கிச் சிதாரிக்கண் கொண்டநீர்
> மெல்விர லூழ்தெறியா விம்மித்தன்—மெல்விரலின்
> நாள்வைத்து நங்குற்ற மெண்ணுங்கொ லந்தோதன்
> றோள்வைத் தணைமேற் கிடந்து."

என்பதனுள், படப்போகும் ஞாயிற்றைநோக்கித் தலைவி மாலை வரப்போகின்றதே யென்று எற்பாட்டில் வருந்துவாளென்று கூறப்பட்டது. இன்னும், உதயணன்காதையிலே உதயணன் எற்பாட்டிலே வருந்தியதாக,

> "வெயில்கண் டோாப் பயில்பூம் பொதும்பிற்
> சிதர்தொழிர் ம்பியொடு மதர்வண்டு மருட்ட
> மாத ரிருங் ]ன் மணிநிறப் பேடை
> காதற் சேவலைக் கண்டுகண் களித்துத்
> தளிர்ப்பூங் கொம்பர் விளிப்பது நோக்கியும்
> பானிறச் சேவல் பாளையிற் பொதிந்தெனக்
> கோண்மடற் கமுகின் குறிவயிற் காணாது
> பவழச் செங்காற் பன்மயி ரெருத்திற்
> கவர்குர லன்னங் கலங்கல் கண்டும்
> ………………………………
> மன்றனொ றுருசிறை நின்ற பாணியுட்
> சென்றுசென் றிறைஞ்சிய சினந்தீர் மண்டிலம்
> குடுறு பாண்டிலிற் சுருங்கிய கதிர்த்தாய்க்
> கோடிய ருச்சிக் குடமலைக் குளிப்ப."

(மாலைப்புலம்பல்—27ம் அடிமுதல்)

என்று கூறும் இவ்வடிகள் எற்பாட்டுவருணனையும் எற்பாட்டிரங்கலு மன்றோ? இவற்றுள், "சென்றுசென்றிறைஞ்சிய" என்பது உச்சிமணித்



தொடக்கத்தையும், 'சினந்தீர்' என்பது நச்சினார்க்கினியர் கூறிய 'வெஞ்சுடர்வெப்பந்தீர' என்பதையும் திடமுறக் காட்டவில்லையா? இதனைக் குறுந்தொகையுள் வரும், "சுடர்சினந் தணிந்து குன்றஞ்சேர" (195) என்பதுங் காட்டும். இனித், தண்ணிழறாழ்ந்து நீழற்செய்யவும் என்பதையும் நற்றிணை 187ம் செய்யுளில்வரும், "நெய்தல் கூம்ப நிழல் குணக் கொழுகக், கல்சேர் மண்டிலஞ் சிவந்துநிலந் தணியப், பல்பூங் கானலு மல்கின் றன்றே" என்பன காட்டும். இது எற்பாட்டுவருணனை; பொழுதுபட என்பது பின்வருதலின். இதன்கண் வரும் விரிவுரையையும் நோக்குக. இங்ஙனமாகவும், நச்சினார்க்கினியர் கூறியவாறு வருணனை தப்பித்தவறியேனும் நெய்தற்றிணைப்பாட்டில் வரவில்லை என்றல் எவ்வாறு பொருந்தும்?.

இங்ஙனமே நெய்தற்கலியினும், தலைவி எற்பாட்டில் வருந்தியது கூறப்படுகின்றது. அதனையுங் காட்டுதும், நெய்தற்கலி, "புரிவுண்ட புணர்ச்சியுள்" என்னும் 142ம் செய்யுளில்,

> "கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி யாயின்
> அவரை நிறுத்து நினைத்தென்னை நீட்டித்
> தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
> துயிர்திரியா மாட்டிய தீ" என்றும்,

> "மையில் சுடரே மலைசேர்தி யாயின்
> பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யு மாத்திரை
> கைவிளக் காகக் கதிர்சில தாராயேல்
> தொய்யில் சிதைத்தானைத் தேர்கு" என்றும்,

மன்றப் பனைமேன் மலைமாந் தளிரே (மஞ்சள்வெய்யிலே) என்றும் தலைவி ஞாயிற்றை விளித்துப் புலம்பியதாகக் கூறுதலானும், 143, 145, 146, 147-ம் செய்யுள்களினும் இவ்வாறே எற்பாட்டிலே ஞாயிற்றை விளித்துப் புலம்பியதாகக் கூறலானும், பொழுதுபடா முன்னும் எற்பாட்டில் வருந்தலை, இவை திடமாக உணர்த்தவில்லையா?

இவற்றுள், 146-ம் செய்யுளில், 'நிரைகதிர்ஞாயிறே' எனத் தலைவி விளித்துப் புலம்பியது காலைஞாயிற்றையென்று பிள்ளையவர்கள் காலைவருதற்குக் காட்டியுள்ளார்கள், அது பொருந்தாது. 'நிரை

கதிர்ஞாயிறு' என்புழி நிரைகதிர் ஞாயிற்றுக்கு விசேடணம், 'நிரைகதிர் நித்திலம்' (சிந்தாமணி—99) என்புழிப்போல. இச்செய்யுள்கள் ஒரே பொருளில் வருதலானும், முன்பின்னுள்ள செய்யுட்களும் அதேகருத்தில் வருதலானும், உரைகாரரும் அங்ஙனே கருத்துப்படக் கூறலானும் எற்பாட்டுஞாயிற்றையே விளித்ததாம். இனி இதில், 'வளாகமெல்லாம் தேடிவா' என்றதுபோல், 142-ம் செய்யுளினும் "அவரை (த்தேடி) நிறத்து நினைந்து என்கை நீட்டித் தருதுவை" என்று கூறுதலானும் எற்பாட்டுஞாயிறேயாம்.

இனி, யான் முன் எடுத்துக்காட்டிய, "பெருங்கடன் முழங்க...... பண்பு மான்றே" (நற்றி—117) என்னுஞ் செய்யுளும், "நெடுவேண் மார்பி னாரம்போல....பெருங்கழி நாட்டே" (அகம்—120) என்னுஞ்செய்யுளும், "ஞாயிறுஞான்று...யன்றிற் குரலே" என்னும் (நற்றி 28) செய்யுளும் மாலைவருகின்றமையையும், இரவுவருகின்றமையையும் எற்பாட்டிற் கூறி வருந்தியதேயாம். இதன்கண் வரும் இறந்தகாலங்கள் எதிர்வு பற்றியதேயாம். விரைவுபற்றி இறந்தகாலமாயின. நற்றிணைச்செய்யுள்களுள், 117-ம் செய்யுட்கொளுவின்கண் 'இவ்வண்ணமாய் வருகின்ற மாலை' என்றும், 218-ம் செய்யுள் விசேடவுரைக்கண், 'மாலைப்பொழுதானது காமநோயை முற்படவிட்டு வருதலின் அது வருதற்கேதுவாகிய ஞாயிறுபடுந்தன்மை கூறினாள்' என்றும் அதனுரையாசிரியர் கூறுமாற்றானுமுணர்க. இவற்றுள் நற்றிணையுள்வரும் 'சிவந்துவாங்கு மண்டிலம்' என்பதும், 'ஞாயிறு ஞான்று குடக்குவாங் கும்மே' (௩௯௮) என்பதும் எற்பாட்டுவருணனையைக் காட்டும். நச்சினார்க்கினியரும், சிந்தாமணி, கனகமாலை—166-ம் செய்யுளில் 'நன்றே வந்ததிம்மாலை' என்பதில், 'விரைவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாயிற்று' என்றதும் இதனை வலியுறுத்தும். இன்னும் ஐங்குறுநூற்றில் வரும்,

"அம்ம வாழி தோழி நாமழ
நின்ற விருங்கழி நீலங் கூம்ப
மாலை வந்தன்று மன்ற
காலை யன்ன காலைமுந் துறுத்தே"

என்பதனுள், 'நாமழ—மாலைவந்தன்று' என்பதும் எதிர்காலத்தை இறந்தகாலமாகக் கூறியதேயாம். இன்னும்,



"உருகெழு தெய்வமுங் கரந்துறை யின்றே
விரிகதிர் ஞாயிறுங் குடக்குவாங் கும்மே
நீரலைக் கலைஇய கூழை வடியா
சாஅ யவ்வயி றலைப்ப வுடனியைந்
தோரை மகளிரு மூரெய் தினரே
பன்மலர் நறும்பொழில் பழிச்சி யாமுன்
சென்மோ சேயிழை யென்றன மதனெதிர்
சொல்லாண் மெல்லியல் சிலவே நல்லகத்
தியாணர் இளமுலை நனைய
மாணெழின் மலர்க்கண் டெண்பனி கொளவே"

என்னும் நற்றிணை 398-ம் செய்யுளும், முன் எற்பாட்டில் நிகழ்ந்ததை எற்பாட்டிற் கூறியதேயாம். இன்னும் அகநானூற்றில் வரும் 300, 340 ம் செய்யுள்களும் எற்பாட்டிற் கூறியவேயாம். குறுந்தொகை ௧௧௮-ம் செய்யுளும் ௧௨௩-ம் செய்யுளும் அதுவே. இவை யுண்மையாதலை ஆன்றோர்வாய்க் கேட்டுணர்க.

இங்ஙனம் வரும் ஆன்றோர் செய்யுட்களை நன்குணர்ந்தே இளம்பூரண அடிகளும், நெய்தற்குப் பெரும்பாலும் இரக்கமே பொருளாதலின் தனிமையுற்று இரங்குவார்க்குப் பகற்பொழுதினும் இராப்பொழுது மிகுமாதலின் அப்பொழுது வருதற்கு ஏதுவாகிய எற்பாடுகண்டார், இனிவருவது மாலையென்று வருந்தமுறுதலின் அது அதற்குச் சிறந்ததென்று கூறினர். அடிகள் கூறியது உண்மையாதல், மேற்காட்டிய செய்யுட்களா னுணரக்கிடத்தலின், எற்பாடு—காலை என்றல் எவ்வாறு பொருந்தும் ஆதலின், எறபாடு—பொழுதுபடுநேரம் என்பது மலைமேல் விளக்கேயாம்.

இனிப் பிள்ளையவர்கள், "அத்திணைக்கேயுரிய காலமாப் பாடினமையோடு நண்பகலும் மாலையும், நடுயாமமும்வரப் பாடியிருக்கின்றார்கள். அப்படியிருக்கவும் 'நெய்தற்றிணைபாடினோரெல்லாம் ஞாயிறுபடுங் காலமாகவே வைத்துப்பாடியிருத்தலினுமாம்' என ஐயரவர்கள் கூறியது 'முழுப்பூசனிக்காயைச் சோற்றுட் புதைத்தது'" என்கிறார்கள்.

நாம் 'நெய்தற்றிணை பாடினரெல்லாம்' என்றது பெரும்பாலும் எற்பாடே நெய்தற்குரியபொழுதாகவைத்துப்பாடினமைபற்றிக்கூறியதே யாம். ஏனைப்பொழுதுகள் மயக்கமாகவருதல்பற்றி, அவை யுரியவை யாகா. நெய்தற்கு மாலை பெரும்பாலும்வருதல்பற்றி அவை யுரிய பொழுதென்றல் கூடுமா? அதுபோலவே காலைவரினுமாம். எற்பாடே (பொழுதுபடுதலே) உரியபொழுதென்பது, மேற்காட்டிய திருக்கோவைச் செய்யுள்களானும், நெய்தற்கலிச்செய்யுள்களானும், மற்றுஞ்செய் யுள்களானும் தெற்றென விளங்கக்கிடத்தலின் பிள்ளையவர்கள், அத் திணைக்குக் காலையே உரியபொழுது என்றதுதான் முழுப்பூசனிக் காயைச் சோற்றுட் புதைத்ததாகும்.

நச்சினார்க்கினியர் மாலைமயக்கமென்றதும் நெய்தற்கு உரியபொழுது எற்பாடு என்பது கருதியே; காலை என்பது கருதியன்று. அஃது, நெய் தற்கலி முதற்பாட்டினுரைக்கீழ், "இது முதலிய மூன்றுபாட்டும் மாலைக்காலத்தைக் கூறினமையின், 'காருமாலையுமுல்லை' என்னும் பொதுவிதிபற்றி, முல்லையுட் கோத்தல்வேண்டுமெனின், அது பெரும் பான்மைபற்றிக்கூறியது. மாலை எற்பாட்டின்பின் நிகழுங்காலமாதலின் அதற்கியைபுபட்டு நெய்தற்கு முரித்தாயிற்று. அது திணைமயக்குறுத லும் என்னுஞ் சூத்திரத்து, 'நிலனொருங்கு மயங்குதலின்று' என்றத னால், காலமொருங்குமயங்குமென்று கொண்டு சான்றோர்பலருஞ் செய் யுள் செய்தார். "கானன் மாலைக் கழிப்பூக் கூம்ப" என்னும் அகப் பாட்டு நெய்தற்கண் மாலைவந்தது. 'தொல்லூழி தடுமாறி' என்னும் நெய்தற்கலியுமது. இந் நிலத்து மாலைவந்த பாட்டுக்கள் பலவுமுள. பிறசான்றோர் செய்யுட்களுள் காலமயங்குமாறு கண்டுகொள்க." என்ற தனால் உணரப்படும். நச்சினார்க்கினியர் மாலை மயக்கமாக வருமென்று கூறினும், 'உரித்தாயிற்று' என்றமையானே, இயைபுபற்றி எற்பாட் டின்வழித்தாய் அதுவும் உரித்தென்பதும் அவர்க்குக் கருத்தாத லுண ரப்படும். தொல்காப்பியர்காலத்தின்பின்னே மாலையும் இரங்கல்பற்றி யும் இயைபுபற்றியும் நெய்தற்குரித்தாகக் கொள்ளப்பட்டதென்று கருதுவாருமுளர். அதுபற்றியே நாமும் இரங்கல்பற்றி "எற்பாட்டை மாலையுளடக்கினர்," என்றும். இதன்கண்வரும் வழு என்னையோ?



இனிப் பிள்ளையவர்கள், பிற்பொழுது பாட்டிபழங்கதை படித்தலி னாலும் விளையாட்டினாலும் கழியும் என்கிறார்கள். தலைவனைப்பிரிந்து தனித்திருப்போர்க்கு விளையாட்டில் மனஞ்செல்லாது; ஒருபோது தன் வருத்தத்தை மறைத்தற்பொருட்டு விளையாடினும் அதன்கண் மனஞ் செல்லாது தலைவன்கண்ணேயே செல்லும். அவற்றை முறையே,—

"ஒள்ளிழை மகளி ரோரையு மாடாய்
வள்ளிதழ் நெய்தற் றொடலையும் புனையாய்
விரிபூங் கான லொருசிறை நின்றோய்" (நற். 155)

என்றும், "உரையாய் வாழி தோழி" என்னும் (நற். 123) செய்யுளுள்

"செம்பே ரிரணை பலவற் பார்க்குஞ்
சிறுவிளை யாடலு மழுங்க
நினக்குப் பெருந்துய ராகிய நோயே" என்றும்,

"தொடிபழி மறைத்தலிற் றோளுய்ந் தனவே
வடிக்கொள் கூழை யாயமொ டாடலின்
இடிப்பு மெய்யதொன் றுடைத்தே கடிக்கொள
அன்னை காக்குந் தொன்னலஞ் சிதையக்
காண்டொறுங் கலுழ்த லன்றியு மீண்டுநீர்
முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறைச்
சிறுபா சடைய செப்பூர் நெய்தற்
றெண்ணீர் மலரிற் றொலைந்த
கண்ணே காமங் காப்பரி யவ்வே." (நற்-௨௩)

என்றும் வருவனவற்றா லுணர்க. இன்னும்,

"பூவை யன்னதோர் மொழியினள் சிறுகுடிப் புகுந்து
கோவில் வைப்பினுட் குறுகியே கொள்கைவே றாகி
பாவை யொண்கழங் காடலள் பண்டுபோன் மடவார்
ஏவர் தம்மொடும் பேசலள் புலம்பிவீற் றிருந்தாள்."

என்னுங் கந்தபுராணச்செய்யுளானு மஃ தறியப்படும்.

இனிப்பிள்ளையவர்கள், நெய்தற்குக் காலைவந்ததாகக் காட்டிய செய் யுட்கள் பலவும், நிலத்துக் கடையாயும் திணைமயக்கமாயும் வந்தனவே யன்றி, அந்நிலத்திற்குரிய இரங்கற்பொருளோடு சம்பந்தப்பட்டு வர வில்லை. அங்ஙனமாதல் காட்டுதும்:—

"பின்னுவிட் டெறித்த" என்னும் (அகநா. 150) செய்யுளில்,

"வாட்சுறா மயங்கும் வளைமேய் பெருந்துறைக்
கணைத்த நெய்தற் கண்போன் மாமலர்
நனைத்த செருந்திப் போதுவா யவிழ
மாலை மணியிதழ் கூம்பக் காலை
கண்ணாறு காவியொடு கண்ணென மலரும்
கழியுங் கானலுங் காண்டொறும்
வாரார் கொல்லெனப் பருவரும்
தாரார் மார்பநீ தணந்த ஞான்றே"

என்பதன்கண், நீ தணந்தஞான்று—கழியுங் கானலுங் காண்டொறும்—பருவரும்." எப்படிப்பட்ட கழி எனில், மாலையிற் கூம்பும்படி, காலையில் மலரும் இயல்புடைய கழி எனக் கழிக்கு அடையாய் வந்தது. அங்ஙனமாதல், 'கானலுங் கழறாது கழியுங் கூறாது" (அகம்—170) என்று கானலையுங் கழியையும் நோக்கிப் புலம்பலால் அறியப்படும். கானற்கானும் கழிக்கானுங் கூறி வருந்துமென்றே "கழியுங் கானலுங் காண்டொறும்........பருவரும்" என்றார். கழியொடுங் கானலொடுஞ் சார்த்திப் புலம்பல், தலைவனுந் தானும் கூடி விளையாடிய இடமாதலின். இங்கே புலம்புவது எற்பாட்டிலே. அது, நீ தணந்தஞான்று நோக்கிப் பருவரும் எனபதனா னறியப்படும். இது காலையன்று என்பது "மாலை மணியிதழ்கூம்ப" என மாலை நிகழ்ச்சியு முடன்வைத்தமையா னறியப்படும்.

இனி, அகம் 180-ம் செய்யுளில், "குவளை—அரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி (குவளை மாலை) சூட்டி" என்பதுபற்றிக் காலை வந்தது என்கிறார்கள். இது நெய்தற்கண் வந்த களவாதலின், அதற்குரிய மாலைசூட்டிப் பெயர்ந்தமைபற்றிக், காலை வந்ததன்றி நெய்தற்குரிய பொழுது வந்தது அன்று. அன்றியும், இரங்கலொடு வந்ததுமன்றாம். காலம் வேறு என்பது செய்யுள்நோக்கி யுணர்க. இன்னும், நெய்தற்கலி, "கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசைதொறும்" என்னும் 123 ம பாட்டில், நித்திரையின்றி வருந்தியவள் கடலோய்ந்தமைகண்டு, நெஞ்சை நோக்கிக் கடலுந் துயின்றது, நீயோ துயின்றிலை எனக் கூறி, நெஞ்சொடு வருந்தியதன்றிக் கடலொடு வருந்தியதன்றாம். அன்றியும், முன்னரெல்லாம் ஒலித்து வருத்திய கடல், இப்பொழுது சாந்தமாய்விட்டது என்றதனால், எமக்கு வருத்தந்தாராது கடலுந் துயின்றது என்பது குறிப்பித்தாள். அங்ஙனமாக; இது சுவாமிகள் கருத்தைச் சிலையி லெழுத்தாக்குவது எங்ஙனம்? அன்றியும் இது காலையன்று வைகறை யாமம். ஆதலானும் அது பொருந்தாது என்பது. "காலையி லோதங் கொட்கும்" என்று, அகம் உஉ0-ம் செய்யுள் கூறுகின்றது. அதனானு மது பொருந்தாது. கடலொலியே வருத்தத்தை மிகுவிப்பது; அது,



"திங்களுந் திகழ்வா னேர்தரு மின்னீர்ப்
பொங்குதிரைப் புணரியும் பாடோ வாதே
ஒலிசிறந் தோதமும் வளரு மலிபுனல்
.... .... .... .... ....
காமமும் பெரிதே களைஞரோ விலரே" (நற்றிணை. 446)

என்பதனா னறிக. குறுந்தொகை 163-ம் செய்யுளும் இதனை வலியுறுத்தும்.

இனி, நெய்தற்கலி 146-ம் செய்யுள் காலையன்று என்பது முன் காட்டப்பட்டது. குறுந்தொகையில் வரும்,

"யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமியள் வைகிய
பொய்யாப் பூணின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோதமல் குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மாறும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு னாணிக் கரப்பா டும்மே."

என்பதன்கண், நெய்தற்பூக்கள் வெள்ளம் நிறையுந்தோறும் அதனு ளமிழ்ந்து வருதலும் விடுவதுமா யிருப்பது கயமூழ்கு மகளிர் கண்ணை யொக்குமென்றால், காலை என்பது எப்படிப் பெறப்படுமோ? இஃது இப்படிப்பட்ட துறை எனத் துறையினியல்பு கூறியதன்றோ? மாலையிற் கூம்பும்வரையும் கண்ணை மானுந்தானே. இதுவுமோர் மருட்டுரை,

இன்னும், "இறவுப்புறத்தன்ன" என்னும் (நற்றி ௧௯.) செய்யுளில் "மாலையில் மலருந் தாழை காலையில் விழவுக்களங் கமழும் சேர்ப்பு" எனச் சேர்ப்புக் கடையாய்வந்ததன்றிக் காலைவந்ததன்று. இது பகற்குறிவந்து நீங்குந் தலைவனுக்குத் தோழிசொன்னதாகலின் காலம் எற்பாடு. இன்னும், நற்றிணை—௨௭௫-ம் பாட்டிலே, "மென்மெலத்—தெறுகதி ரின்றுயிற் பசுவாய் திறக்கும்—பேதை நெய்தற் பெருநீர்ச் சேர்ப்ப" என்பது திணைமயக்கமாதலின், மருதத்திற்குரிய காலைவந்தது. அன்றியுஞ் சேர்ப்புக்கு அடையாயும் வந்தது. இன்னும், நற்றிணை 283-ம் செய்யுளிலும் "நெய்தல்சூற்று மனையை யணியுந் துறைவ!" என்பதுந் துறைக்கு அடையாய்வந்தது. இன்னும் இதனுள், "கடலிற்றோன்றிய சூரியனினும் வாய்மையுடையாய்" என்பது வாய்மைக்கு அடையாய்வந்தது. 'திங்களொடு—ஞாயிறன்ன வாய்மையும்' எனத் தப்பாதுதித்தல்பற்றி ஞாயிற்றை உவமைபுணர்த்திப் பிறருங் கூறுதல் காண்க. இங்ஙனம் உவமையாய்வந்த சூரியனையும் விளங்காது காலை என்கிறார். இப்படிப் பிள்ளையவர்கள் புரட்டிக்கூறும் பகட்டுரைகள் பல.

இங்ஙனமே அடையாயும், திணைமயக்கமாயும், வருவனவற்றைக் காட்டி, நெய்தற்குக் காலைவந்ததென்று பிள்ளையவர்கள்கூறுவது வெறும் பகட்டுரையாகுமன்றி உண்மையை நிலைநாட்டமாட்டாது. சிறுபான்மை இரங்கலோடு காலை வரப்பெறினும் அது மயக்கமேயாம். இதனைப் பிள்ளையவர்களே சிந்திப்பார்களாக.

இங்ஙனமே ஊடலோடு சம்பந்தப்படாதனவாய், நிலத்தோடு சம்பந்தப்பட்டனவாக மருதத்துக் காலைவருஞ் செய்யுட்கள் சங்க இலக்கியங்களிலே பல காணப்படுகின்றன. அகநானூற்றிலே, ௩௬, ௩௧௬, ௩௬௬, ௩௮௬-ம் செய்யுட்களும் நற்றிணையிலே ௨௬௦, ௩௩௦, ௪௦௦-ம் செய்யுட்களும் மருதத்துக் காலை வந்தனவேயாம். மற்றைநூல்களிலும் வருகின்றன. அவைகள் ஊடலோடு சம்பந்தப்படாமையின், அவை காட்டிற்றிலம்.



இனிப் பிள்ளையவர்கள், "நெடுங்கயிறு வலந்த......கோடுயர் திணி மணற் றுஞ்சுந் துறைவ" என்னுஞ் செய்யுள், காலையிற் சென்று மீன் பிடித்ததைக் குறித்ததென்கிறார்கள். இதில், இளைஞரும் முதியரும் கூடி என்றமையால் இஃது கரைவலைபோட்டு இழுக்குந் தொழிலைக் குறித்ததேயாம். அக் கரைவலை கடற்பதம்நோக்கிக் காலையிற் போடுவதுமுண்டு; இரண்டு மணிக்குமேற் போடுவதுமுண்டு. 'மணற்றுஞ்சுந் துறை' என்றதனாலே இது எற்பாட்டிலே போட்டதாம். யாம் காலையிற் செல்வதை மறுக்கவில்லை. பெரும்பாலும் எற்பாடென்றே கூறினும். இன்னும் வழிவலை அல்லது கொடிவலை, என்று சொல்லப்படும் வலை கொண்டு மீன்பிடிப்பது இரவிலேயாம். இவர்கள் இராஉணவுங்கொண்டு 4 மணி, 5 மணி வரையிலே புறப்படுவார்களாம். தூரமான இடங்களுக்குப்போகில் 1 மணி 2 மணி வரையிலும் புறப்படுவார்களாம். இவர்கள் தாம் மீன்பிடிக்கக்குறித்த இடத்துக்குப்போ [illegible]வுடன் வலையைவீசிவிட்டு உணவை அருந்திக் கட்டுமரத்திலே படுத்து[illegible]விடுவார்களாம். மற்றைநாட் காலையில் வலையைச் சுருக்கி மீன்களையும் [illegible]க்கொண்டு வருவார்களாம். இத்தொழில் பெருங்கடல்களில் நடப்ப[illegible]. இவ்வலையிற்றான் பெருமீன்களகப்படுவது. இவ்வுண்மையைப் பரதவரிடம் கேட்டறிக. 'எற்படவருதிமில்' என்றது சிறுமீன்வேட்டத்தை. இளம்பூரணவடிகள் புறத்திணையிலும், தும்பைத்திணை நெய்தற்குரித்தாமாறு கூறுங்கால் நெய்தற்கு ஓதிய எற்பாடு போர்த்தொழிற்கு முடிவாதலானும்' என்று கூறுதலானும் மீன்வேட்டையால் வருதலானும் 'எற்பாடு' நெய்தற்கு உரித்தாதல் பெறுதும்.

இதுகாறுங் கூறியவாற்றானே 'வைகறைவிடியல்' என்பதே இளம்பூரணர் கொண்ட பாடம் என்பதூஉம், நச்சினார்க்கினியாற் கொள்ளப்பட்ட 'வைகுறுவிடியல்' என்பதே ஐயமான பாடம் என்பதூஉம், இலக்கியங்களில் 'வைகுறு' என்னுஞ் சொல்லும் வைகறைக்குப் பெயராய் வருகின்றதென்பதூஉம், மூன்றுயாமங்கோடலே தமிழ்வழக்கு என்ப

தூஉம், ஆறுகாலபூசைகொண்டு சிறுபொழுது ஆறு என்பது நன்கு நிச்சயிக்கப்படும் என்பதூஉம், இரவு பத்துமணிவரையும் மாலை என்பது பொருந்தும் என்பதூஉம், தொல்காப்பியர் கூறிய சூத்திரம், 'வைகறை விடியல்' எனினும், 'வைகுறு விடியல்' எனினும் உம்மைத்தொகை என்பதே அவர்கருத்தென்பதூஉம், விடியல் நாள்வெயிற்காலையேஎன்பதூஉம், மருதத்துக்கு, ஊடல் சம்பந்தப்படுதலால் விடியலும் உரித்தென்பதூஉம், எற்பாடு பொழுதுபடுதலையே உணர்த்தி நெய்தற்குரித்தாமென்பதூஉம், பிற்பகலே எற்பாடு என்பதூஉம், காலை காமந்தணியுங் காலமாதலின் இரங்கற்குரிய தன்றென்பதூஉம், இரங்கின் அது தணியாக்காமமென்பதூஉம், எற்பாடும் மாலையும் ஒன்றன்றென்பதூஉம், எற்பாட்டுவருணனையும் புலம்பலும் நூல்களிலே வருகின்றன என்பதூஉம், பிள்ளையவர்கள் காட்டிய உதாரணங்கள் இரங்கலோடு சம்பந்தப்பட்டுவரவில்லை என்பதூஉம், ஓரோவழி வரினும் அது மயக்கமாகும் அன்றி உரித்தாகாதென்பதூஉம், இவற்றானே ஸ்ரீசிவஞானசுவாமிகள் கருத்தே பொருத்தமெனத் தாபிக்கவந்த பிள்ளையவர்கள்கருத்துப் பொருந்தாதென்பதூஉம், இளம்பூரணர் நச்சினார்க்கினியர்கள் கொண்டபடி சிறுபொழுதாறேயென்றலே துணிபாமென்பதூஉம் நன்கு உணரக்கிடந்தமை காண்க.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

---

ஸ்ரீ:

# கூத்தர் 'தெய்வப்பரணி' யென்றது எதனை?

ஒட்டக்கூத்தப்புலவர் தாம்பாடிய தக்கயாகப்பரணியில்,

"செருத்தந் தரித்துக் கலிங்கரோடத்
தென்றமிழ்த் தெய்வப் பரணிகொண்டு
வருத்தந் தவிர்த்துல காண்டபிரான்
மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே"

என்ற தாழிசையில், கவிச்சக்கிரவர்த்தியாகிய ஜயங்கொண்டாராற் பாடப்பட்ட 1-வது குலோத்துங்கன்விஷயமான கலிங்கத்துப்பரணியைத் "தென்றமிழ்த் தெய்வப்பரணி" யென உள்ளன்போடு வாயாரப் புகழ்ந்துரைத்திருத்தலானும், தாம் பாடிய குலோத்துங்கசோழனுலாவில்,

"விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமாள்—தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன்"

எனச் சயங்கொண்டாருக்குப் பின்றோன்றிய ஒரு பெரும்புலவனாற் பாடப்பட்ட மேற்குறித்த 1-வது குலோத்துங்கன் குமாரன் விக்கிரமசோழன் விஷயமான கலிங்கத்துப்பரணியை முற்கூறிய பரணிக்கு அதிகதரமான பெருமையுடையதெனக் கருதிப் 'பெரும்பரணி' என அவ்வாறே புகழ்ந்துரைத்திருத்தலானும், அவ்விரண்டு பரணி நூலாசிரியர்க்கும் பிற்காலத்தவராகத் தோன்றுதலாலே கம்பரும் கூத்தரும் ஒரு காலத்தவரல்லர். ஏறக்குறைய இரண்டுநூற்றாண்டுகள் முறையே முன்னும் பின்னுமாக இருந்தவர்களென்பர்.

அவ்வாறு அவர்கள் நிர்த்தாரணஞ்செய் தெழுதியிருத்தற்கேது வேறியாதேனுமுண்டோவென்று பரியாலோசித்துத் தெரிந்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது.

அந்த மதிநுட்ப நூலோடுடையார் எந்தப்பரணியை ஜயங்கொண்டார்பரணியென்பதற் காதாரமாக எதனைக் காட்டியிருக்கின்றார்களோ அந்தச் 'செருத்தந்தரித்து' என்ற கூழடுதலு மிடுதலு மென்ற வகுப்பின்கணுள்ள 49-வது தாழிசையின்கீழ்,—

"இப்பரணி பாடினார் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கிரவர்த்திகள். இப்பரணி பாட்டுண்டார் விக்கிரமசோழதேவர்."

என்ற வாக்கியங்கள் காணப்படுகின்றன.

இவை பழைய ஏட்டுப்பிரதியைப் பார்த்தெழுதியவர் ஒன்றை மற்றொன்றாகப் பிரமித்தெழுதியவைகளா? வேறு? என்பது ஆராய்ந்தே அறிந்துகொள்ளத்தக்கதாயிருக்கிறது.

கூத்தர் தாம் பாடிய கலிங்கத்துப்பரணியைத் தாம் பாடிய தக்கயாகப்பரணியிற் புகழ்ந்து கூறுவரா? கூறார். அச்சக்கரவர்த்தியாகிய கூத்தரே "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்று புகழப்படுங் கலிங்கத்துப்பரணியைத் தாம் பாடிய குலோத்துங்கன்பிள்ளைத்தமிழில்,

"பாடற் பெரும்பாணி தேடற் கருங்கவி கவிச்சக்ர வர்த்தி பாவச்
செஞ்சே வகஞ்செய்த சோழன் றிருப்பெயா"

என்று ஜயங்கொண்டாரைக் கவிச்சக்ரவர்த்தியென்றும், அவர் 1-வது குலோத்துங்கன்மீது பாடிய கலிங்கத்துப்பரணியைப் 'பாடற்பெரும்பாணி தேடற்கருங்கவி' யென்றும் நன்குமதிப்போடு புகழ்ந்திருப்பதையறிந்திருந்தால் முன்சொன்னவாறு பிழையாக வெழுதியிரார். கூத்தர், தம்மைப் பிறர் நன்குமதிக்கும்பொருட்டுத் தம்மைத் தாமே புகழ்தல் தீச்சுடரைநன்னீர்சொரிந்துவளர்த்ததுபோலாகுமென்பதையறியாதவரல்லர். இது நிற்க.

அத்தாழிசையிலுள்ள 'வருத்தந்தவிர்த்துலகாண்டபிரான்' என்ற சொற்றொடராவது விக்கிரமதேவனைக் குறிக்கின்றதாவென்று பார்ப்போம். அவ்விக்கிரமனுக்கு இரண்டு மெய்க்கீர்த்திகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் வெளிப்படையாக அப்படி யொன்றுங் கூறப்படவில்லை.



1வது குலோத்துங்கன் மெய்க்கீர்த்தியில்,

"அருக்கனுத யத்தவ் வாசையி லிருக்கும்
கமல மனைய நிலமக டன்னை
முந்நீர் குளித்த வந்நாட் டிருமால்
ஆதி யேனத்திய தஞ்சளி யாவகை
யெடுத்துத்தன் குடைக்கீ ழின்புற விருத்தி"

என்று கூறியிருத்தலால் 1வது குலோத்துங்கனே 'வருத்தந்தவிர்த்துலகாண்டபிரா' னென்று வெளிப்படையாகத் தோன்றுகிறது.

அன்றியும், கூத்தர் எவனைத் தக்கயாகப்பரணியில் 'வருத்தந் தவிர்த்துலகாண்டபிரா' னெனக் கூறினாரோ அவனையே இராஜராஜ சோழனுலாவில்

"கலகமுஞ் சுங்கமுங் காய்கலியு மாற்றி
யுலகைமுன் காத்த வுரவோன்"

என்று கூறியிருத்தலுங் காணத்தக்கது.

இக் குலோத்துங்கன் வருத்தந்தவிர்த்ததென்னையோவெனின், மனுவின்காலமுதலாக ஏற்பட்டுவந்த சுங்கமென்னும் வரியைத் தவிர்த்தது; கண்டபடி நிலவரி யேற்படுத்தாமல் நிலங்களையெல்லாம் அளந்து ஓரே திட்டமாக ஆறிலொருபாகம் வரியேற்படுத்தியது; காடுவெட்டி நாடு நகரங்களாகச் செய்தது; உழுதொழிலாளர்க்குதவியாக ஏரிமுதலியவைகளேற்படுத்தியது; சகல ஜனங்களுக்கும் உபகாரமாகச் சத்திரம், சாவடி, சாலை, சோலை, குளம், ஏரி, கோயில் மண்டபம் முதலியவைகளை அழகாக அமைத்தது முதலியவைகளாகும்.

இவ்வாறு உலகத்தின் வருத்தந்தீரும்படி உபகாரம் புரிந்திருத்தலாலேதான் ஆன்றோர்களாலே உபகாரஞ்செய்தவனென்று பொருள் கொள்ளப்படும் பிரான் என்னும் பதத்தோடு சேர்த்து 'வருத்தந் தவிர்த்துல காண்டபிரா' னென்றனர். 48-வது தாழிசையிலும் 'சுங்கந் தவிர்த்தபிரான்' என்றதுங் காண்க.

இவ் வாராய்ச்சியானே "வருத்தந்தவிர்த்துலகாண்டபிரா" னென்றது 1-வது குலோத்துங்கனையே குறிக்கின்றதென்று நன்கு விளங்குவது கருதத்தக்கது.

பின்னும், கூத்தருலாக்கொண்ட விக்கிரமன், குலோத்துங்கன் II, இராஜராஜன் II: இவர்களுக்குச் சற்றுப் பிற்காலத் தரசாண்டுகொண் டிருந்த சங்கரசோழ னென்பான்மீது பாடியிருக்கிற உலாவில்,

"கூடலார்
உம்பரணி கொள்ளக் கொல்வித் தொருகலிங்க
வெம்பரணி கொண்ட விரலோனும்"

என்று 1வது குலோத்துங்கனுக்கு அவன்மெய்க்கீர்த்தி மூன்றிலும் கூறப்படாத தென்றமிழ்த் தெய்வப்பரணி கொள்வதற்குரிய வுரிமையைக் 'கொல்வித்து' என்றுகூறி விளக்கியதுமன்றி,

"கூடிய சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனும்—தெள்ளித்தம்
முன்னோ யகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னோ யிரஞ்சொரிந்த பூபதியும்—என்னுமிவர்"

என்னு மிக்கண்ணிகளில், கூத்தர் 2வது குலோத்துங்கன்மீதுமாத்திரம் உலாவோடு பிள்ளைத்தமிழும் பாடினாரென்று சொல்லப்பட்டிருக்கிறதேதவிர விக்கிரமனுக்குக் கூத்தர் கலிங்கத்துப்பரணி பாடினாரென்று சொல்லப்படவில்லை. ஆனாலும், விக்கிரமன், தன்பிதா 1வது குலோத்துங்கன் அனுமதிபெற்றுக் கருணாகரத்தொண்டைமானோடு கூடக் கலிங்கஞ்சென்று அத்தேசத்தரசனாகிய சோடகங்கனை வென்று வெற்றிமாலைசூடினானென்று சோழவமிசசரித்திரம் முதலியவற்றால் விளங்குதலாலும் விக்கிரமசோழனது 1வது மெய்க்கீர்த்தியில், 'கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்' என்றும், 2வது மெய்க்கீர்த்தியில், 'கலிங்க மிரியக் கடமலை நடாத்தி, வலங்கொள்' என்றும் சொல்லப்பட்டிருத்தலாலும், முன்னர்க்காட்டிய குலோத்துங்க சோழனுலாவிலுள்ள "விரும்பரணில்" என்று தொடங்கும் கண்ணி முதலியவைகளன்றி, இராஜராஜசோழனுலாவில்,

"தரணி பொருகவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பரிதி—முரணிப்
புரந்தா னேமி பொருவ வகில
துரந்தான் விக்கிரம சோழன்"



என்றும் சொல்லப்பட்டிருத்தலாலும், விக்கிரமனும் ஒருபெரும்புலவனால், உரிமையோடும் ஒரு கலிங்கப்பரணி பெற்றிருந்தானென்று, தெரிகிறது. அது இப்போது காணப்படவில்லை.

கூத்தர்காலத்து அக்கலிங்கப்பரணி விளங்கிக்கொண்டிருந்ததனாலே தான் ஜயங்கொண்டார்பரணியை வலக்கண்போலத் தெய்வப்பரணி யென்றும் இப்போது காணப்படாத பரணியை இடக்கண்போலப் பெரும்பரணி என்றும் புகழ்ந்திருக்கின்றனர்.

மற்றொருவகையாலும் 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்று பிற்காலத்தவராலும் புகழப்படும் ஜயங்கொண்டார்பரணியையே கூத்தர் தெய்வப்பரணி என்று புகழ்ந்திருக்கின்றதை நிரூபிப்பாம்.

தக்கயாகப்பரணியிற் கூழடுதலும் இடுதலும் என்னும் பிரிவில்,

"தாராக வண்டந் தொடுத்தணிந்தார்
தமக்கிடம் போதத் தமனியத்தாற்
சீராச ராசீச் சராஞ்சமைத்த
தெய்வப் பெருமானை வாழ்த்தினவே."

என்ற 45வது தாழிசையில் தெய்வப்பெருமாள் என்றது 1வது ராஜராஜசோழனை. இவனே பராதீனமுற்றிருந்த சோழராஜ்யத்தைப் பழையபடி ஸ்வாதீனமாக்கி உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்து ஸ்திரமாக ஸ்தாபித்தவனாகையாலே அங்கன்றிமறவாது முதன்முதலில் அவனை வாழ்த்தியதாகக் கூறியிருக்கின்றனர்.

இராஜராஜன் ஈச்சுவரனுக்குக் கட்டுவித்த கோயிலெல்லாம் இராஜராஜேசுவரம் என்று சொல்லப்படுமாதலின், இந்த இராஜராஜேசுவரம் என்பது தஞ்சாவூரிலுள்ள பிரகதீசுவர னென்ற பெரியவுடையார் கோயிலென்றுணர்ந்துகொள்ளும்பொருட்டுச் சிவபெருமானுக்குப் பலதிருநாம மிருப்பவும் 'தாராக வண்டந் தொடுத்தணிந்தா' ரென்றார். பராதீனமான ராஜ்யத்தை ஸ்வாதீனமாக்கிக்கொண்டது தெய்வத்தன்மையாலன்றி மனிதனது முயற்சியாலாகாது என்னு மருமையும் பெருமையுந்தோன்றத் 'தெய்வப்பெருமா' னென்றனர்.

சிலபிரதியில், 'சிராஜராஜ புரஞ்சமைத்த' என்று எழுதியிருக்கிறது. இது பாடாந்தரமன்று; பிழையேயாம், ஏனெனில்,

1வது ராஜராஜன் பட்டத்துக்குவந்த சிலவருடங்களுக்குள், கங்கபாடி யென்றநாடு முதலிய பலநாடுகளைக் கைப்பற்றிக்கொண்டானென்றும், அவற்றுள், கங்கபாடி என்ற நாட்டுக்கு ராஜதானியாயிருந்த தலைக்காடு என்னும் நகரத்துக்கு ராஜராஜபுரம் என்று தன்பெயர் வைத்தானென்றும் சரித்திரவாயிலாகத் தெரிதலுமன்றி, அவ்வூர்ச் சாசனங்களில் தலைக்காடென்ற ராஜராஜபுரம் என்று காணப்பட்டா லும், இது ஆசிரியர் கருத்தாயின், சிவபெருமானுக்குத் 'தாராகவண்டந் தொடுத்தணிந்தார்' என்ற திருநாமங்கூறார்; வேறுதிருநாமங் கூறி யிருப்பர். அன்றியும், அவ்வூரில் சிவபெருமானுக்கு ஓராலயம் கட்டு வித்தானென்று ஒன்றுலும் விளங்கவில்லை. தஞ்சாவூர்ப் பிரகதீச்சுரன் கோயிலையே கட்டுவித்துத் தன்பெயராலே ராஜராஜேச்சுரம் என்று பெயர்வைத்தானென்று சோழசரித்திரத்தாலும் அக்கோயிற் சாசனத்தா லும் நன்கு விளங்குகின்றது காண்க.

'தாராகவண்டம்' என்ற தாழிசைக்கு அடுத்ததாயிருக்கிற,

"பிரட்டனை யேபட்டங் கட்டழித்துப்
பேரே முரையிலக் கம்புரக்க
இரட்டனை யேபட்டங் கட்டிவிட்ட
விராசகம்பீரனை வாழ்த்தினவே."

என்ற 47வது தாழிசையில், இராஜகெம்பீரனை யென்றது: 1வது ராஜ ராஜன்போனை வீரராஜேந்திரசோழனை. இராஜகெம்பீரன் என்ற இப்பெயர் ஒருவருக்கு இடுகுறிப்பெயருமன்று; காரணஇடுகுறிப்பெயரு மன்று. எல்லா அரசர்களுக்கும் பொதுவான காரணப்பெயர். ஒருவர் எந்த நிருபருக்கு நிருபமெழுதினாலும் அதில் 'ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜகெம்பீர' என்று எழுதுவது சர்வசாதாரணமாக வழங்கிவருகிறது. அன்றியும், ராஜகம்பீரசதுர்வேதிமங்கலம், ராஜகம்பீரமாராயன், ராஜ கம்பீரவளநாடு, ராஜகம்பீரன்மண்டபம், ராஜகம்பீரன்மலை என்று ராஜகம்பீரனென்ற பெயர் பலபேருக்குப் பொதுவாக வழங்குவது காண்க.

ஆயினும் இத்தாழிசையிற் குறிப்பிட்டிருக்கிற ராஜகெம்பீர னென்றவனை இதிற் கூறப்பட்டிருக்கிற அடைமொழிகள் வீராஜேந்திர னென்று விளக்கமாக விளம்புகின்றன என்பதை விளக்க இவனுடைய



சரித்திரத்தைச் சோழவம்சசரிதம் முதலியவற்றிற் காணப்படுகிறபடி கொஞ்சம் எழுதவேண்டியது அவசியமாக விருக்கிறது.

அச்சரிதம், வீராஜேந்திரன் இரட்டபாடி (இராஷ்ட்ரகூடம்) அரச னை ஆகவமல்லனையும் அவன்மக்கள் விக்கிரமார்க்கன் முதலானவர் களையும் துங்கபத்திராசங்கமத்திற் போரிற் புறங்காட்டியோடும்படி வெருட்டிவிட்டுத் தனது ராஜதானியாகிய கங்காபுரியையடைந்து நிச் சிந்தையனாக அரசுசெலுத்திக்கொண்டிருந்தனன். அப்போது தோற் றோடிப்போன ஆகவமல்லன் முன்சண்டைபுரிந்த கூடலசங்கமத்திற் சண்டைபுரிய வரவேணும்; வாராதவர் பிரட்டர்; மன்னரல்லரென்று சுகஸ்தலிகிதமாக ஒரு கடிதமெழுதி அதைக் கங்காகேத்தனென்பா னிடங்கொடுத்து வீராஜேந்திரனிடங் கொடுக்கும்படி விடைகொடுத் தனுப்பினன். அவன் அங்குப்போய்த் தெரிவித்தவுடனே வீராஜேந் திரன் சந்தோஷித்தனாய் யுத்தசந்நத்தனாய்க் கூடலசங்கமம் வந்து சேர்ந்தனன். சேர்ந்து ஒருமாதகாலம்வரை பிரட்டராகிய இரட்டர்கள் அங்கு வாராததனாலே கோபமூண்டு ஏழரையிலக்கமென்னும் மறுபெய ருடைய இரட்டபாடிநாட்டைத் தீக்கிரையாக்கித் துங்கபத்திராநதிக் கரையில் ஒரு ஜயஸ்தம்பம்நாட்டிக் கங்காபுரிக்குத் திரும்பினன். அப் போது பிரட்டனாகிய ஆகவமல்லன்மகன் விக்கிரமார்க்கன் வந்து சரண மடைய அபயமளித்து இரட்டபாடி நாட்டுக்கு இளவரசுப்பட்டங்கட்டித் தன்மகளையும் அவனுக்கு மணம்புரிவித் தனுப்பின னென்பது.

"புதல்வருந் தானு முதுகிட் டோடிய
கூடலே களமெனக் குறித்தக் கூடலில்
வாரா தஞ்சினர் மன்ன ரல்லர்
போர்ப் பரும்பழிப் புரட்ட ராகவென்
றியாவரு மறிய வெழுதிய பதிகம்
மேவரு மோலை விடையொடுங் கொடுத்தவ்
விரட்டபாடிப் பிரட்டர்கள்
கங்கா கேத்தனை யேவ வாங்கவன்
வந்தடி வணங்கி வாசக முணர்த்தலுஞ்
சிந்தையு முகமுந் திருப்புய மிரண்டும்
வந்தெழி லுவகையோ டிருமடங்கு பொலியப்

போந்தப் போர்க்களம் புகுந்து காந்தையில்
வல்லவர் கோனை வரவு காணாது
சொல்லிய நாளின் மேலுமோர் திங்கள்
பார்த் திருந்த பின்னைப் பேர்த்தவன்
கால்கெட வோடி மேல்கட லொளித்தலும்
தேவ நாதனுஞ் சித்தியுங் கேசியும்
மூவருந் தனித்தனி முதுகிடப் பாவரு
மிரட்ட பாடி யேழரை யிலக்கம்
மூரட்டொழி லடக்கி முழங்கெரி மூட்டி
வெங்கதிர்ப் புலியேறு வியந்து விளையாடத்
துங்கபத் திரிக்கரை ஜயபத் திரத்தூண்
நானிலம் பரச நாட்டி மேனாள்
வந்த பிரட்டனை வல்லவ னாக்கி"

என்ற வீரராஜேந்திரனது மெய்க்கீர்த்தியும் அச்சரித்திரத்தை உண்மையானதென் றுரைக்கின்றது.

இத்தாழிசையில், பிரட்டனை யென்றது குறித்த இடத்திற் போருக்கு வாரதவர்பிரட்டர் என்று நிருபமெழுதிய ஆகவமல்லனை என்றபடி. பட்டங்கட்டழித்து என்றது ஆகவமல்லனை இரட்டபாடியரசுரிமையை இழக்கச்செய்து என்றபடி. இரட்டனையே என்றது தன்னைச் சரணமடைந்த இரட்டபாடியிளவரசனை விக்கிரமார்க்கனையே என்றபடி. பேரேழரையிலக்கம் புரக்க வென்றது பெருமையாகிய ஏழரையிலக்கமென்னும் மறுபெயருடைய இரட்டபாடியை யாளும்படி என்றபடி. பட்டங்கட்டி என்றது அந்த ராஷ்ட்ரகூடத்துக்கு இளவரசனுக்கி யென்றபடி. விட்ட என்றது (தன் மகளுக்கு மணவாளனுமாக்கிக்) குந்தளத்துக்கு அனுப்பின என்றபடி, இவ்வாறு அடைமொழிகளுக்குப் பொருளுண்மையாலே இராஜகேம்பீரனை யென்றதற்கு வீரராஜேந்திரனை யென்று பொருள் கூறப்பட்டது. இதிலுள்ள முதலேகாரம் அசைநிலை, 2வது ஏகாரம் இரட்டர்களிற் சரணமடையாதவர்களைப் பிரித்து நிற்றலாலே பிரிநிலை.

1வது ராஜராஜனுக்குப் பின்பு இவ்வரசனை வாழ்த்தியதாகக் கூறியது, இந்த ராஜராஜனுடைய மெய்க்கீர்த்தியில்,



"இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டு"

என்று புகழ்ந்திருந்தும், இவன்மகன் வீரராஜேந்திரன் மெய்க்கீர்த்தியிலும்,

"பீடியல்
இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
மாப் பெருந் தண்டாற் கொண்டு"

என்று மறுபடியும் கூறியிருத்தலாலும், இவனுக்குப்பின் வீரராஜேந்திரன் வரையுள்ள அரசர்கள் மெய்க்கீர்த்தி முதலியவைகளிலும் இரட்டபாடிச்சண்டை முதலிய கலகங்கள் விளைந்துகொண்டேயிருந்தன என்று சொல்லப்படுதலாலும், வீரராஜேந்திரனே பகைவரையெல்லாமொடுக்கித் தன்குடைக்கீழடக்கித் தன் முன்னோர்களிடமிருந்து பகையரசரிடம் போயிருந்த நாட்டையெல்லாம் கைப்பற்றிச் சோழராஜ்யத்தை நன்றாக நிலைபெறச்செய்தானென்னும் அபிமானத்தாலுமென்க.

அன்றியும், இவனே, வடமொழி தென்மொழி யென்னு மிரண்டுக்கும் இலக்கணம் ஒன்றேயென் றெவரு மினிதுணரும்படி தன்பெயரால் இருமொழியிலும் வல்லுநரான புத்தமித்திரர் என்னும் புலவர்சிகாமணியைக்கொண்டு வீரசோழியமென்னும் இலக்கணநூலை யியற்றுவித்தவன். இது, அந்நூலிலுள்ள "எல்லாவுலகும், மேவிய வெண்குடைச் செம்பியன் வீரராஜேந்திரன்" என்னுஞ் சொற்றொடராலும் இனிது, விளங்குதல் காண்க.

இவ்வரசன் தம் உலாக்கொண்ட மூவேந்தரையும்போலப் புலவரை ஆதரித்த புரவலன் என்னும் அபிமானத்தாலும் வாழ்த்தியதாகக் கூறினரென்றுங் கூறலாம்.

"நீடிய வெண்டிசை நிழல்வாய்ப்ப
நேரிய தெக்கிண மேருவென்னப்
பீடிகை தில்லை வனத்தமைத்த
பெரிய பெருமானை வாழ்த்தினவே."

என்ற 46வது தாழிசையின்கீழ் உரையாசிரியர் "நீடிய பீடிகையெனக் கூட்டுக. 'நீடிய தில்லை யென்னில், திருச்சிற்றம்பலத்தின் பழமை தோன்றாது" என்று எழுதியிருக்கின்றனர். இவ்வுரையாசிரியர் பல இடங்களிற் பிறர்மதத்தை மறுத்துரைத்திருக்கின்றனர். ஆதலாலே இந்நூலுக்கு இவருரைக்கு முந்தியும் ஓர் உரையிருந்ததாகக் காணப் படுகிறது. அதில் நீடிய என்பதைத் திசைக்கு அடையாக்கிப் பொருள் கூறியிருக்கலாம். அதை மறுத்து நீடிய என்பதைப் பீடிகைக்கு அடையாக்கிக்கொள்ளவேண்டுமென்றனர். தில்லைவனத்து நீடிய பீடிகையன்றிப் பிற்காலத்தரசாற் சமைத்த சிறியபீடிகையொன் றிருந்ததுபோலும்.

இவ்விரண்டுரைகளும் சிரோவேட்டணப்பிராணுயாமம்போலிருக் கிறது. உள்ளவாறே நீடிய என்பதை எண்டிசைக் கடையாகக் கொண்டாற் குற்றமென்னையோ? தெரியவில்லை. நிற்க.

இதில், பெரியபெருமானை என்றதற்கு இயற்பெயரைக் குறித் துரையாது "இவன் ஸ்ரீபீடங்கண்ட பெரியபெருமானென வறிக" என்று கூறியிருக்கின்றனர். இவ்வாறு குறித்துரைக்கப்பட்டவன் 1வது குலோத்துங்கன்மகன் விக்கிரமசோழனேயாம். எதனாலெனிற் கூறுதும்:

விக்கிரமசோழன்மெய்க் கீர்த்தியில்,

"வாழி வாழியிம் மாநிலங் காக்கத்
திருமணிப் பொற்றோட் டெழுதுபத் தாண்டு
வருமுறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையால்
தன்குல நாயகன் றாண்டவம் பயிலுஞ்
செம்பொனம் பலஞ்சூழ் திருமா ளிகையுங்
கோபுர வாசல் கூடசா லைகளும்
இலகு வலங்கொண் டொளிவிளங்கு நேமிக்
குலவரை யுதய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து
இன்ன பலவு மினிது சமைத்தருளி"



என்று சொல்லப்பட்டிருத்தலாலும், இவனுக்குப் பிற்காலத்தரசர்கள் மெய்க்கீர்த்திகளிற் செம்பொனு னீடிய பலிபீடஞ்சமைத்ததாகச் சொல்லப்படாமையாலு மென்க.

ஆயின் விக்கிரமனைப் பெரியபெருமானென்றதென்னையோ வென்னில், ஒட்டக்கூத்தர் காங்கேயன் முதலிய உபகாரிகள்கொடுத்த பொருளெல்லா மிழந்து மிருந்தவறுமைமை யுடைந்து கலங்கி இக்கலக்கந்தீர்ப்பா ரெவ ரென் றுசாவி, ஔதார்யம் முதலிய நற்குணமுடையனாய் அடுத்தாரை ஆதரிக்கும் பெருமையும் கல்வியினருமையறியும் புலமையு முடையவன் விக்கிரமசோழனே எனக்கேட்டு அவனையடைந்து பாடி அவன்கொடுத்த பரிசில்களைப்பெற்று மகிழ்ந்து,

"இடுக்கட் புண்படு நிரப்புக் கொண்டுழன்
றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களந்
திடுக்கிட் டஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன்
றிருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தந்தன"

என்று பாடி அவனை உவப்பித்து அவனது ஆஸ்தான பண்டிதரா யமர்ந்து மிகவும் பெருமைபெற்று வாழ்ந்திருந்தனர். பின்னர் அவ னனுமதிப்படி II-வது குலோத்துங்கனுக்கு வித்யாகுருவாகவும், ஆஸ்தானபண்டிதராகவும் ஆயினர். ஆதலாலேதான் விக்கிரமனைப் பெரியபெருமானென்று வியந்துகூறியிருக்கின்றனர்.

ஆயின், வீரராஜேந்திரனுக்குப் பின் விக்கிரமன்பிதாவாகிய Iவது குலோத்துங்கனுக்கு வாழ்த்துக் கூறியதாகக் கூறாமல் விக்கிரமனைக் கூறியதென்னையெனில், அவனை II-வது குலோத்துங்கன் இராஜராஜன் II : இவர்களை வாழ்த்தியதாகக் கூறுமிடத்துச் சிறப்பித்துக்கூறக் கருதியிருந்ததனாலென்க.

'செருத்தந்தரித்து' என்ற 49வது தாழிசையில் IIவது குலோத் துங்கனை வாழ்த்தியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உலகாண்ட பிரான்–Iவது குலோத்துங்கன்; மைந்தன்–விக்கிரமன்; மைந்தனை– அவன்மைந்தனை IIவது குலோத்துங்கனை யென்க.

இந்நான்கு தாழிசைகளாலும் பாட்டுண்டாரான ராஜராஜசோழனது முன்னோர்கள் வாழ்த்துக்கள் கூறப்பட்டன. 49, 50 தாழிசைகளில் ராஜராஜனது வாழ்த்துக்கள் கூறப்படுகின்றன. சுங்கந்தவிர்த்தபிரான் 1வது குலோத்துங்கன், அவன் மகன் விக்கிரமன், அவன் மைந்தன் ராஜராஜன். மன்றுக்கிடங்கண்ட கொண்டல் 2-வது குலோத்துங்கன்; அவன் மைந்தன்—இராஜராஜனென்க.

இம்முறையாலும் 'வருத்தந்தவிர்த்துக்காண்டபிரான் 1-வது குலோத்துங்கனென்பதும், தெய்வப்பாணியென்றது கவிச்சக்கரவர்த்தியாகிய ஜயங்கொண்டார்பாணியே யென்பதும் தெளிவாக விளங்குகின்றது.

இதனால், ஜயங்கோண்டாரான என்பதை ஒட்டக்கூத்தரான என்றும் குலோத்துங்கசோழதேவரென்பதை விக்கிரமசோழதேவரென்றும் நினைத்தெழுதியது பிழையேயாம். வேறன்று.

பிழையாக எழுதியதற்குக் காரணம், மேற்பிரதியான பழைய ஏட்டில் ஜெயங்கோண்டா என்றெழுதிய இடமும் குலோத்துங்க என்று எழுதிய இடமுஞ் சிதைந்திருந்ததேயாம். பின்னுள்ளாரும் ஆலோசியாமல் அவ்வாறே எழுதிக்கொண்டுவந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

ஆதலாலே, யாழ்ப்பாணத்தார் நன்றாகப் பரியாலோசனைசெய்தே நிர்த்தாரணஞ்செய்துள்ளார்கள் என்று நினைக்கின்றேன்.

இதில் என் சிற்றறிவுக்கெட்டாமல் வந்துள்ள பிழைகளையும் விட்டவைகளையும் திருத்திக்கூட்டி யாதரித்தருளும்படி மிகவும் வணக்கத்தோடும் பிரார்த்திக்கின்றேன்.

ரே. அப்புவையங்கார்,
புதுவை.

---



ஸ்ரீ:

# மதிப்புரை.

ஸூத்ராநுகுண்யஸித்திவிமர்சம் :— இது, திருச்சிராப்பள்ளியிற் சிறந்த நியாயவாதியான வேதாந்தவித்வான் A. V. கோபாலாசார்யர் M.A., B.L., அவர்களால் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டு மஹாவித்வான்களான மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்யராலும் திருக்கோட்டியூர் ஸௌமியநாராயணாசார்யராலும் பரிசோதிக்கப்பட்டுக் கும்பகோணம் விசிஷ்டாத்வைதஸபையாரால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. வேதாந்தவித்வான் கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரியவர்களால் எழுதப்பட்ட ஸூத்ராநுகுண்யஸித்தி என்னும் புஸ்தகத்தில், ஸ்ரீபாஷ்யமுதலான க்ரந்தங்களில் விசிஷ்டாத்வைதபரமாயிருக்கும் வியாக்கியானங்களை அந்யதாக்ரஹணத்தால் அபார்த்தம்செய்து தூஷித்திருப்பதையறிந்து, தத்பரிஹாரார்த்தமாக உண்மைப்பொருளை யாரும் அறியுமாறு தெரிவிக்கவேண்டி அதன் மறுப்புரையின் பிரதமபாத பராமர்சமாக, ஜிஜ்ஞாஸாதிகரணம், ஜன்மாத்யதிகரணம், ஸமன்வயாதிகரணம், ஈக்ஷத்யதிகரணம், ஆனந்தமயாதிகரணம், ஆகாசாதிகரணம், ப்ராணாதிகரணம், ஜ்யோதிரதிகரணம், ப்ரதர்த்தநாதிகரணம் என்ற அதிகரணங்களைப் பரிசீலனை செய்து இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

இதில் விவாதவிஷயமான ப்ருஹ்மஸூத்திரங்களுக்கு விசிஷ்டாத்வைதபரமான அர்த்தமே உபபந்நமென்றும், ஸூத்ராநுகுண்யஸித்தியில் சொல்லியிருப்பவை முன்பின் முரண்படுகின்றனவென்றும், அத்வைதக்ரந்த தாத்பர்யங்களையும் அவை விரோதிக்கின்றனவென்றும் உபயஸம்ப்ரதிபந்நமான ப்ரமாணவசனங்களையும், பரபக்ஷப்ரமாணக்ரந்தங்களையுங் கொண்டு நிரூபித்திருப்பதாய்த் தெரிகிறது.

இப்படிப்பட்ட வாதக்ரந்தங்களால் படிப்பவர்களுக்கு ஜ்ஞானவிருத்தியும், வித்யாவிருத்தியும், குணதோஷ விவேகமும் உண்டாகக்கூடுமாறாயும், பெரும்பாலோர் எழுதுவன விஷயவிவாதமாய்த்தொடங்கி, வாக்வாதமாய்ப்பரிணமித்து ஹேளாவாக்கிகள் நிறைந்த பரதூஷணத்தில் முடிகின்றன.

இந்தப்பராமர்சத்தில் அப்படியான தூஷணமில்லாமல் விஷயசோதனமேசெய்து எழுதியிருப்பது மிகப் பாராட்டத்தக்கது. இதில் ஸ்ரீபா

வத்பாத்பாஷ்யம், நியாயரக்ஷாமணி, பாமதீ, கல்பதரு, பரிமளம், அத்வைதஸித்தி முதலான அத்வைத க்ரந்தங்களைக்கொண்டும் நிரூபித்திருப்பதை நோக்கும்போது விசிஷ்டாத்வைத க்ரந்தங்களோடு அத்வைத க்ரந்தங்களிலும் மிருந்த பரிசயஞ்செய்து எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இந்தப்புஸ்தகம் தேவநாகரலிபியில் 120 பக்கங்களுள்ள நல்லபதிப்பாகப் பதிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1. வேண்டுவோர் கும்பகோணம் விசிஷ்டாத்வைதஸபையிற் பெறலாம்.

கோம்பி விருத்தம்:-இது, ராவ்ஸாஹிப். வே. ப.சுப்பிரமணியமுதலியாரவர்களால் பாடப்பெற்றதொரு சிறப்புடைய சிறு காப்பியம். 'எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண், மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் நீதியை அறிவுறுத்தற்கு ஆங்கிலமொழியிற் கோம்பியின் நிறமாறுதல்பற்றிக் கூறிய கவிகருத்தையுட்கொண்டு, முதலியாரவர்கள் தம் மனோதர்மத்தால் தமிழ்நூன்முறைதழுவிப் பாடியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இதிற் கூறப்பட்ட பாலைநிலவருணனை, சோலைவருணனை, வாவிவருணனை முதலிய வருணனைகளும் உவமை உருவகம் உல்லேகம் முதலிய அணிகளும் படிப்பவர்க்கு மனமகிழ்ச்சியளிக்கத்தக்கன. செய்யுளெல்லாம் சிறுவர்களும் பயிலுதற்குரிய தெளிவான நடையுடையன. சமய வருணச் சார்புகள் ஒன்றும் பற்றாமல் பொதுமையிற் புலமைத்திறமைதோன்றப் பாடியிருப்பது எல்லோராலும் போற்றற்குரியதே. ஆண்பாலார் பெண்பாலார் எல்லோரும் இணங்கிக் கற்றற்குரிய நூல்கள் எழுதவிரும்புமவர்க்கெல்லாம் இது வழிகாட்டியாகும். மக்களின் அறிவுமாறாட்டத்தாலுண்டாகும் போராட்டத்தை அறவே ஒழித்தற்குரியது. ஒவ்வொரு செய்யுளுக்கும் தெளிவான உரை வரையப்பட்டிருக்கிறது. நூலியற்றுமாற்றலும் உரைவரையுந்திறனும் ஒருங்கமைந்த முதலியாரவர்களது தமிழ்ப்புலமை பாராட்டத்தக்கது. இப்புத்தகம் தமிழ்நூல்கள் கற்கத்தொடங்கும் மாணவர்களுக்கெல்லாம் பாடமாகவைத்துக் கற்பித்தால் மிகவும் பயனளிக்கத்தக்கது. இது இப்பொழுது ஸ்ரீமான் T. K. சிதம்பரநாதமுதலியார் (B.A., B.L.,) அவர்களால் இரண்டாமுறையாகப் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடம் பெறலாம்.



ஐந்திணையெழுபதும், கைந்நிலையும்:—சங்கநூற் றொகுதியுட் பதினெண்கீழ்க்கணக்கிற் சேர்ந்த இந்நூல்களிரண்டும், சென்னை: பிரஸிடென்ஸிகாலேஜில் தலைமைத்தமிழாசிரியராயிருந்து இப்போது இளைப்பாறிவருபவரும் கலித்தொகை மூலமும் உரையும் நன்கு ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டுவருபவருமான ஸ்ரீமத் இ. வை. அநந்தராமையரவர்களால் பரிசோதித்து ஒரு புத்தகமாகப் பதித்து வெளியிடப்பட்டுள்ளன. இதன் விலை அணா 6.

இவற்றுள் (1) ஐந்திணையெழுபது:— குறிஞ்சிமுதல் நெய்தலீறாயுள்ள ஐந்திணைப்பொருள்களுள் விரும்பிய சில கிளவிகளைக்கொண்டு மூவாதியார் என்பவரால் எழுபது வெண்பாவாகப் பாடப்பெற்றது; பழையவுரையுடன் கூடியது. இந்நூல் இதற்கு முன்பு பிறரால் வெளியிடப்பெற்றிருப்பினும் அவ்வெளியீட்டில் இல்லாத திருத்தங்கள் இப்பதிப்பில் அமையப்பெற்றுள்ளன. இந்நூற் செய்யுள்கள் பிறநூலுரைகளில் எடுத்தாளப்பட்ட இடங்களும் காட்டப்பட்டுள்ளன.

(2) கைந்நிலை:—மாறோக்கத்து முள்ளிநாட்டு, நல்லூர்க் காவிதியார்மகனார் புல்லங்காடரால் ஏற்றபெற்றி அகனைந்திணைக்குரிய கிளவிகளையெடுத்துக்கொண்டு அறுபது வெண்பாவாற் பாடப்பட்டது; பழைய உரையுடன் கூடியது. பண்டை உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட பாடல்களுள்ளது. பாட்டும் உரையும் பலவிடத்துச் சிதல்வாய்ப்பட் டழிந்த பகுதிகளுக்கு இடம் விடப்பட்டுள்ளன. இந்நூல் முழுதும் சிதைந்தழியாமுன்னமே ஐயரவர்கள் இதனை உயிர்ப்பித்து உலவுமாறு செய்திருப்பது தமிழறிஞராற் பாராட்டற்பாலது.

களவழிநாற்பது:—பொய்கையார் என்னும் புலவராற் புறத்திணைப்பொருளுள் களவழி வாழ்த்து என்னும் துறைபற்றிப்பாடப்பட்ட நாற்பது வெண்பா வுடையது; பதினெண்கீழ்க்கணக்கினுட் சேர்ந்தது. இது இ. வை. அநந்தராமையரவர்களால் பழையவுரையுடன் பரி

சோதித்துப்பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதனைப் பாடிய பொய்கையாரையும், பாடல்பெற்ற செங்கணானையும், விடுகொண்ட கணைக்காலிரும்பொறையையும் பற்றி அறியத்தக்க செய்திக ளடங்கிய முகவுரையெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8. ஐயாவர்கள் சங்கநூல்களை ஆராய்ந்து அச்சிடுவதற்கு மிகவும் தகுதிவாய்ந்திருப்பதை அவர்கள் பரிசோதித்து அச்சிட்டுவெளியிட்டுள்ள கலித்தொகை மூலமும் உரையும் அடங்கியபுத்தகத்தின் முதலிரண்டுபகுதிகளால் அறியலாம். அதன் மூன்றாம்பகுதியும் வெளிவருநிலையிலிருக்கிறதென்று தெரிகிறது. இன்னும் இவர்கள் சங்கநூல்களை நன்கு ஆராய்ந்து அச்சிட்டுவருவார்களாயின் அது தமிழ்மொழிவளர்ச்சிக்கு ஒரு பேருதவியாகும். இவர்கள் அச்சிடும் புத்தகங்கள் பலவும் விலையாகுமாறு தமிழபிமானிகள் உதவிபுரிவார்களாக.

களவழி நாற்பது, ஐந்திணையெழுபது, கைந்நிலை: என்னும் இப்புத்தகங்கள் வேண்டுவோர் ஸ்ரீமத் இ. வை. அநந்தராமையரவர்கள், 3/6, பஸார்லேன், மயிலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

ஸ்ரீராமநாதமான்மியம்:- இஃது, ஈழநாட்டுக் கொழும்புநகர்க் கௌரவ ஸ்ரீ பொன். இராமநாதன் (கே.ஸி., ஸி.எம்.ஜி.) அவர்களின் அரியசரிதத்தைப் பொருளாகக்கொண்டு சாவகச்சேரி ஸ்ரீமான் ச. பொன்னம்பலபிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. அவையடக்கம், நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு முதலியவற்றோடு விரிந்துபரந்து தமிழ்வளஞ்சிறந்த ஓராயிரம்பாடல்கள் இதில் அமைந்துள்ளன. அவை செய்யுளேயாயினும் உரைநடைபோல எளிதிற் பொருளுணர்த்தும் இயல்பின. புலவர்போற்றும் புகழுடையரான ஸ்ரீ பொன் இராமநாதனவர்களின் பெருமைக்கேற்ப இந்நூலும் பெருமைவாய்ந்து விளங்குவதாகும். இதுபோன்ற அகலக்கவிகளைக்கொள்ளுதற்கும் கொடுத்தற்கும் உரியார் மிகவும் அரியராகிய இக்காலத்து நாவலர்பலரும் இதனை நன்குமதித்தல் ஒருதலை. இப்புத்தகம் வேண்டுவோர் சுன்னாகம் இராமநாதவித்தியாலயப் பண்டிதராகிய இதன் ஆசிரியருக்கு எழுதிக்கொள்க.



தமிழ்ப்பேரகராதி:—சென்னைச் சருவகலாசங்கத்தின் ஆதரவில் அச்சிடப்பெறும் இதன் நான்காந்தொகுதியின் நான்காம்பகுதி இதுபொழுது வெளிவந்துளது. இதில், பஞ்சீகரித்தல் என்பது முதல் பக்ஷிராஜன் என்பது வரையுள்ள சொற்களுக்கு வழக்கம்போல் மேற்கோள்களுடன் பொருள்விளக்கப்பட்டிருக்கிறது. தடித்த கடிதத்தில் அழகாகவும் தெளிவாகவும் அச்சிடப்பட்ட 160 பக்கங்கள் கொண்ட இப்பகுதியின் விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் லா ஜர்னல் ஆபீஸ், போஸ்டுபாக்ஸ் 604, மயிலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

தமிழ்ப்புலவர் வரலாறு (ஒன்று முதல் மூன்று பகுதிகள்):-இவை, வித்வான் பண்டித ஸ்ரீமத் கனகராஜையரவர்களால் எழுதப்பட்டு மதுரை: புஸ்தகவர்த்தகர் ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களால் நல்ல கடிதத்திற் கலாசாலை மாணவர்களுக்கு உபயோகமாகும்படி நன்கு பதிப்பிக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் முதற்பகுதி அகத்தியர், தொல்காப்பியர், ஒளவையார், கபிலர், பரணர், நக்கீரர், அரிசில்கிழார், ஆவூர் மூலங்கிழார் என்னும் இவ்வெண்மர்களின் வரலாறுகளடங்கியது. இரண்டாம்பகுதி கல்லாடனார், மாமூலனார், மாஙகுடிமருதனார், காக்கைபாடினியார் நச்செள்ளையார், பாலைக்கோதமனார், பாரதம்பாடிய பெருந்தேவனார், மதுரை மருதனிளநாகனார், கடியலூர் ருருத்திரங்கண்ணனார், பொய்கையார், முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் இப்பதின்மர் வரலாறுகள் அடங்கியது. மூன்றாம்பகுதி மோசிகீரனார், சீத்தலைச்சாத்தனார், இளங்கோவடிகள், பெருந்தலைச்சாத்தனார், கோவூர்கிழார், மாறோக்கத்து நப்பசலையார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் இவ்வெழுவர் வரலாறுகள் அடங்கியது. இம்மூப்பகுதியிலுமுள்ள வரலாறுகள் பலவும் சங்கச்செய்யுள்களையும் நூலுரை[illegible]ம் தழுவி இடையிடையே தொடர்புபடுத்தற்குப் பொருந்துவன [illegible], படிப்பவர் இன்புறுமாறு தெளிவான தமிழ்நடையில் ஆங்காங்கு வேண்டும் மேற்கோட் செய்யுள்களுங்

காட்டப்பட்டுள்ளன, இப்புத்தகங்கள், படிக்கும் மாணவர்களுக்குப் பழந்தமிழ்ப்புலவர்களின் வரலாறுணர்த்தல்மட்டுமன்றித் தமிழிலக்கியப் பயிற்சியையும் விளைவிக்கத்தக்கன. இப்புத்தகங்களெழுதிய வித்துவான் பண்டித கனகராஜையரவர்கள் உழைப்பும் ஊக்கமும் பாராட்டத்தக்கன. இப்புத்தகங்களுள் முதற்பகுதியின் விலை அணா 10. இரண்டாம்பகுதியின் விலை அணா 8. மூன்றாம்பகுதியின் விலை அணா 8. வேண்டுவோர் ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கள், புத்தக வர்த்தகர், மதுரை என்ற விலாசத்திற் பெறலாம்.

பாண்டியமன்னர்:-இதுவும் வித்வான் பண்டித நா. கனகராஜையரவர்களால் படிப்பவர்க்குப் பலவகையிலும் உணர்வுண்டாமாறு செவ்விய தமிழ் நடையில் இடையிடையே வேண்டுஞ் செய்யுள்களை மடுத்துச் சில பாண்டியர்களின் சரிதங்கள் விளங்கும்படி இரண்டுபகுதிகளாக எழுதப்பட்டு, மதுரை: புத்தக வர்த்தகர் ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்களால் பதிப்பிக்கப்பட்டது. இது தமிழ்நடையும் நவீன கற்பனாசரிதங்களும் எழுதப்பயிலும் மாணவர்களுக்கு வேண்டும் மனோதர்மத்தை உண்டாக்கவல்லது. இதன் முதற்பகுதியில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், ஆரியப்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்: என்னும் மூவர் வரலாறுகள் உள்ளன. இதன் விலை அணா 10. இரண்டாம்பகுதியில் உக்கிரப்பெருவழுதி, தலையாலங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியன் என்னும் இவ்விருவர் வரலாறுகள் உள்ளன. இதன் விலை அணா 8. வேண்டுவோர் மதுரை: புத்தகவர்த்தகர் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்களிடம் பெறலாம்.

தமிழ் இலக்கியம்:—இது, வாலிபஜக்கிய கிறிஸ்துவசங்கத்தைச் சேர்ந்த, திருநெல்வேலி ஸ்ரீமத். ஞா. சா. துரைசாமி பிள்ளையவ ளால் தமிழர் உரிமைநாற்றொடருள் ஒன்றாக எழுதப்பட்டு. பதிப்பாக வெளிவந்திருக்கிறது. இதனுள், தமி...



தமிழ்மொழி, தொல்காப்பியகாலவரை, கடைச்சங்கம், கடைச்சங்கநூல்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் விஷயங்கள் ஆராய்ந்தெழுதப்பெற்றுள்ளன. இப்புத்தகம் ஒன்றினுள்ளேயே நீண்டகாலம் அறிஞர்களால் தமிழைப்பற்றி ஆராய்ந்து வெளியிடப்பட்ட பலவிஷயங்களும் தெளிவாய் அறியலாம். தமிழ்பயிலும் உயர்தரவகுப்பு மாணவர்களுக்கு மிகவும் உபயோகமுள்ளது. பிள்ளையவர்கள் செய்துவரும் தமிழாராய்ச்சியும் உழைப்பும் பாராட்டத்தக்கன.

இலக்கணபாடங்களும் உரைநடையாக்கமும்:—இது, திருவாளர் ம. சண்முகசுந்தரம் M.A., L.T., அவர்களால் எழுதப்பட்டு ஆசிரியர் நூற்பதிப்புக்கழகத்தில் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. இதில் கீழ் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழிலக்கணம் பயிற்றுவார்க்குப் பயன்படுமாறு தமிழின் எழுத்திலக்கணங்களையும் சொல்லிலக்கணங்களையும் நன்குணர்ந்து வினாவிடைமுறையால் எளிதில் உணர்த்தும்படி எழுதப்பட்ட இலக்கணபாடங்கள் முதற்பாகமாகவும், உரைநடைக்கேற்ற படங்களையமைத்து அப்படங்களைச் சுட்டி வினவி விடையளிக்கச்செய்யும் முறையாற் போதிக்கும் உரைநடையாக்கம் இரண்டாம்பாகமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இப்புத்தகம் போதனாமுறையிலும் உபாத்தியாயர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், தம்புசெட்டித்தெரு, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

கந்தர்கலிவெண்பா:— இது, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபரஸ்வாமிகள் அருளிச்செய்தது; சென்னை கிறிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் வித்வான் ஸ்ரீமத். வி. மு. சுப்பிரமணிய ஐயரவர்களால் எழுதப்பட்ட குறிப்புரை முதலியவற்றுடன் பதிப்பிக்கப்பெற்...க்கிறது. இதன் முகவுரை அறிவிப்பு இவற்றால் ஐயரவர்கள் தமக்கு ...சளித்துதவிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகளவர்க ...விசுபெறுமாறு தமிழ்கற்பித்த ஆசிரியரான மஹா

மஹோபாத்யாய பருஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களிடத்தும் மிக்க நன்றியறிதலுடையாராயிருத்தல் புலப்படுகின்றது. காசிமடத்துப்பரம்பரைவிளக்கத்தால் ஆதி குமரகுருபர சுவாமிகள் முதல், காசிவாசி சாமிநாதசுவாமிகள்வரையுள்ள அம் மடாதிபதிகளுடைய பெயரும் பெருமையும் விளங்கும். கந்தர்கலிவெண்பாவின் குறிப்புரையால் ஐயரவர்கள் கல்வித்திறமையும் பல தமிழ்நூற்பயிற்சியும் விளங்குகின்றன. இவ்வாறு தமிழ்நூல்களை அச்சிடுவித்தும் பரிசளித்தும் தமிழ்மொழிவளர்ச்சிக்கு உதவிபுரிந்துவரும் காசிமடாலயகர்த்தரவர்களுக்குத் தமிழுலகம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுளது.

செந்தமிழ்மஞ்சரி (1, 2, 3, ம் மலர்கள்):—இவை கல்விச்சாலைகளிற் கற்கும் மாணவர் கற்பதற்கேற்ற தெளிவான தமிழ்நடையிற் பலவகையுணர்வு முண்டாகும்படி வெவ்வேறுவிஷயங்களைத் தொகுத்து எழுதப்பட்டன. இடையிடையே எளிதிற் போதிக்கும்படியான சில பாடல்களும் படங்களும் அமைக்கப்பெற்றன. இவற்றுள் முதல்மலரின் விலை அணா 7. இரண்டாவது மலரின் விலை அணா 9. மூன்றாவது மலரின் விலை அணா 10. வேண்டுவோர் ஐயம் கம்பெனியார், புத்தக வியாபாரிகள், நுங்கம்பாக்கம், கதீட்ரல்போஸ்டு, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

பதிபசுபாச விளக்கம்:—இது, ஸ்வீடன்பர்க் சுவாமியாரால் லத்தீன்பாஷையிலியற்றப்பெற்றதன்மொழிபெயர்ப்பாக, சென்ற நியூரிபார்மர் பத்திராதிபர் ஸ்ரீமத் D. கோபாலசெட்டியாரவர்களால் தமிழில் எழுதப்பட்டு, லண்டன் ஸ்வீடன்பர்க் ஸொஸைட்டியாருக்காகச் சென்னையிற் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு விளக்கமான முகவுரையொன்று செட்டியாரவர்களால் வரையப்பட்டிருக்கிறது. விஷய அட்டவணையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் பதி, சிவசூரியன், காரண காரிய வேற்றுமைகள், சிருட்டி, பசு: என்னும் விஷயங்கள் சர்
தாழ, சைவசமயக்கொள்கையைப் பின்பற்றி எழுதப்பட்
தோன்றுகின்றன. இப்புத்தகம் மதபோதனை



வாங்கிப்படிக்கத்தக்கது. இதன் விலை ராப்பர் பைண்டு ரூ 1—8—0 போர்டு பைண்டு ரூ 2—0—0. வேண்டுவோர் D. கோபால செட்டியாரவர்கள், லேட் எடிட்டர், நியூரிபார்மர், ராயப்பேட்டை, சென்னை: என்ற விலாசத்திற் பெறலாம்.

கந்தபுராணச்சுருக்கம்:—இது யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டைக் கண்ணவிங்கேசுவரசுவாமிகோயில் தர்மகர்த்தராகிய ஸ்ரீமத் குருமூர்த்தி ஐயரவர்களால் தெளிவானதமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம்: என்னும் ஆறுகாண்டங்களின் கதைகளைச் சுருக்கமாக யாரும் படித்துணரும்படி யெழுதியிருப்பதால் பாலர்களுக்கு முதலில் கதைப்புத்தகமாக வாங்கிப்படித்தற்கு மிகவும் உபயோகமுள்ளது. தெய்வபக்தியும் நல்லபுத்தியும் உண்டாக்கத்தக்கது. இதன் விலை முதலிய விவரம் விளங்கவில்லை, வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதித் தெரிக.

சுகுணவதி:— இது, ஸ்ரீமான் மாந்தை: கிருஷ்ணையரவர்களால் சிறந்த மனோபாவங்கள் அமைய எழுதி யச்சிடப்பட்டதொரு நாவல். படிப்பவர்க்கு விருப்பளிக்கும்படி கதைப்போக்கில் எழுதப்பட்டது; பல நீதிகளைப் புகட்டற்குரியது. இடையிடை படங்களும் பதிக்கப்பட்டு நன்கு யெழுதப்பட்டிருக்கிறது. பல பத்திராசியர்களாலும் நன்குமதிக்கப்பட்டது. இதன்விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் மாந்தை கிருஷ்ணையரவர்கள், ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர் என்ற விலாசத்திற் பெறலாம்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரிதம்:— இதுவும் மாந்தை
த் கிருஷ்ணையரவர்களால் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின்சரித்
கியோடந்தம் முறையே நன்றாய் எழுதி வெளியிடப்பட்
யோகராஜஸ்வாமிகளுடைய குணாதிசயங்களும்,

தெய்வபக்தியும், பெருமையும் நன்குபுலப்படும்படி எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே சந்தர்ப்பத்துக்கேற்ற படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 8. வேண்டுவோர் மார்க்கை கிருஷ்ணையாவர்கள், ஸ்ரீ கிருஷ்ணா பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், என்ற விலாசத்திற் பெறலாம்.

கர்மாநுஸார ரோகநிர்ணயபரிஹார தீபிகை:— இது, நதிக்குடி ஜோஸ்யம் ஸ்ரீமத் மு. ரா. ரெங்கசாமி ஐயங்காரவர்களால் அநேக க்ரந்தங்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்சந்நிதானத்தில் பரிசோதிக்கப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது. இதில், ராசிகாரகங்கள், கிரஹகாரகங்கள், துவாதசபாவகாரகங்கள், கிரஹங்களின் நட்பாட்சி உச்சம் பகை நீசங்கள், சந்த்ரநமித்ருத்துவங்கள், ரோகோத்பத்தி நிர்ணயங்கள், 12 ராசியிலும்நின்ற நவக்கிரஹ மஹாதெசாபுத்தி பலன்கள், ரோகநிவாரண பரிஹாரங்கள் இவையெல்லாம் யாரும் படித்தறிந்துகொள்ளும்படி மிகத் தெளிவாகவும் விரிவாகவும் எழுதப்பட்டுள்ளன. இவற்றோடு, நவக்கிரஹதசாபுக்திபலரோகசாந்திப்பிரயோகவிதிகளுக்குப் பல சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் ஸம்ஸ்கிருதப்ரமாண சுலோகங்கள் பலவும் தொகுத்து இப்புத்தகத்திற் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புத்தகம் நவக்கிரஹ தெசாபுக்தி பலன்களை அறிந்துகொள்ளவும், கருமரோக நிவாரணமாக சாந்திகள்செய்யவும் மிகவும் உபயோகமாயுள்ளது. இதன் விலை ரூ 2. வேண்டுவோர் ஸ்ரீமத், மு. ரா. ரெங்கசாமி ஐயங்கார், நதிக்குடிக்கிராமம், மாறனேரிப் போஸ்டு, சிவகாசிவழி என்ற விலாசத்திற் பெறலாம்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| •7. | தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| •9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| • | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... ... | | | |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

### செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 8 | 0 |
| 2. | கணூல் (5) இனியநாற்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| •3. | வளையாபதிச்செய்யுட்கள் ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| •7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| •9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11.* | விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14 | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | கரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21.* | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | | | |
| 22.* | திரு[illegible]க்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23.* | விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழி[illegible]விடை ... ... ... | 0 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... ... | 1 | 4 | 0 |
| 35.* | திருமந்திரநூறுபாட்டுக்குரை ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100 செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடுந் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... ... | 1 | 4 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:—1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 28 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் பெற்றுக்கொண்டால் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் [illegible] ரூ 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

0 1 0 ...

லக்ஷ்மிநாராயணையர், மானேஜர்.